# சௌபாக்கியத்திற்கு
# சிவ சக்தி
# வழிபாட்டு முறைகள்

புலியூர்க் கேசிகன்

மாருதி பதிப்பகம்
173, பீட்டர்ஸ் ரோடு, இராயப்பேட்டை, சென்னை - 600 014.

முதற் பதிப்பு : ஆகஸ்ட், 1983
உரிமை பதிவு

விலை ரூ. 5-00

மாருதி பிரஸ், 173, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-600 014.

# முன்னுரை

தெய்வ பக்தியானது சித்தத்தை உயர்ந்த சக்தியோடு இணைத்து ஐக்கியப்படுத்தும். அந்த உயர்ந்த சக்தியோடு இணைந்து ஐக்கியப்படும் சித்தம், மனத்தையும் உயர்ந்த சக்திகளிலேயே செலுத்தும். அதனால், மனிதனின் சிந்தனைகளும் செயல்களும் நாளுக்கு நாள் உயர்வடையும். இதனால் பக்தியோகம் செய்யும் மனிதனே மிகவும் உயர்வான்.

உயர்வான இவனிடமிருந்து ஒளிவீசிப் பரவும் ஒளிக் கதிர்கள், இவனைச் சார்ந்த பலரையும் ஊடுருவி உயர்த்துகின்றது. இப்படியே இந்த உயர்த்தும் முயற்சி காலகாலங்கட்கும் பலருக்கும் தொடர்கின்றது.

ஜீவாத்மாக்களின் உயர்ச்சிக்கு இந்தப் பரிபூரண பக்திமயமான வழிபாட்டுநிலை ஒரு சிறந்த பயிற்சிக் களமாக என்றும் அமைகின்றது. உயர்ந்த குறிக்கோளை மனத்திலே நிறுவி, அதனோடு ஒன்றிக் கலந்து, அதுவேயாக முயலும் அருமையான சித்த யோகம் இது எனலாம்.

இந்தப் பக்தி யோகத்திற்கு அவரவர்கள் தாங்கள் பிறந்து வளர்ந்த சூழ்நிலைகளுக்கேற்பப் பல தெய்வ நினைவுகளுள் ஏதாவது ஒன்றை இலட்சியமாகக் கொள்ளலாம். ஒன்றேயான பரமாத்மாவே எல்லாமாகவும் நின்று, அவரவர் கட்கும் அரு . செய்யும்.

இந்த வழிபாட்டு மரபுகளுள், பக்தியோகத்துள், ஆதிமகா சக்திகளின் ஒளி வடிவங்களான சிவ வழிபாடும், சக்திவழிபாடும் மிகமிகச் சிறந்தவை; சக்தி வாய்ந்தவை; பயன் தருபவை; ஒளியும் உயர்வும் நித்தியமான ஆனந்த சுகமும் தருபவை.

இவற்றை ஒவ்வொருவரும் தாமே கைக் கொண்டு பயனடைவதற்கு உதவியாக, பெரியோர்களின் ஞான வாக்குகளிலிருந்து அறிந்த முறைகளையும் போற்றுதல்களையும் நான் இந் நூலில் தொகுத்துத் தந்துள்ளேன்.

சிவவழிபாடு சித்தசாந்த நிலையைத் தருவதற்கும், சக்தி வழிபாடு சகல நலன்களையும் இகபர வாழ்விலே தருவதற்கும் உதவும்.

நிறைமொழி மாந்தர்களான மகான்களின் மறைமொழிகளின் வழிநின்று, நாமும் நம்முடைய இகபர வாழ்வு நலன்களை வளர்த்து வாழ முயல்வோமாக!

இந் நூலினைப் பயபக்தியுடன் வெளியிட்டுப் பக்தர்களுக்கு அறிமுகப்படுத்தும் மாருதி பதிப்பகத்தின் தொண்டினைப் பாராட்டி வாழ்த்துகின்றேன். அமர நிலையிலே விளங்கும் என் உளங்கலந்த நண்பரும், மாருதியின் ஸ்தாபகருமான திரு. A. M. விநாயகம் அவர்களும், இம் முயற்சியை வரவேற்று வாழ்த்துவார்கள் என்று நம்புகின்றேன்.

என்னையும் இயக்கி, இதனை அமைப்பதற்கு என்னுளே நின்று உதவிய மகாசக்தியின் பெருங் கருணையையும் பணிவுடன் போற்றுகின்றேன்.

அன்பர்கள் விரும்பி ஏற்றுப் பயன் காண்பதற்கு அன்னையாள் துணைநின்று அருள்வாளாக.

அன்பன்,
**புலியூர்க் கேசிகன்**

# பதிப்புரை

மனம் ஒருமை நிலையில் உயர்ந்த குறிக்கோளுடன் இணைந்து நின்று செயலாற்றுமானால், மனித வாழ்விலே சந்திக்கும் பல விபரீதங்களிலிருந்து மனித சமுதாயம் விடுதலை பெற்றுவிடலாம். மன நிம்மதியோடு பிறவியெடுத்ததன் பயனை முழுவதும் அநுபவித்து உயர்ந்த நிலையினையும் அடைந்துவிடலாம்.

அலையும் மனத்தை அலையாமல் நிறுத்தி, உயர்ந்த சிந்தனையோடு ஒன்றுபடுத்தும் முயற்சிகளுள் மிகவும் பயனுள்ளது, அந்த மனத்தை ஒரு தெய்வீக நினைவோடு முற்றவும் சேர்ந்திருக்கும்படியாகப் பழக்கி விடுவதாகும்.

இந்த மனப்பழக்கத்தால் தெய்வீக சக்திகள் மனத்திலும் உடலிலும் பரவி ஒளிவீசத் தொடங்கும். வாழ்விலே புதுமையும் மகிழ்ச்சியும் நிலையாக அமையும்.

இந்த வகையில் மனத்தைச் சிவத்தோடும், சிவசக்தியோடும் முழுவதுமாக இணைத்துக்கொண்டு ஆனந்தம் காண்பதற்கு உதவும் முறைகள் கொண்டதே இந் நூலாகும்.

மகா ஞானிகளின் வாக்குகள் என்னும் ஞான மலர்களை, ஆசிரியர் புலியூர்க் கேசிகன் அவர்கள் தேடித் தொகுத்து, பக்தி வழிபாட்டிற்குரிய நல்ல தொரு மாலையாக்கி, அருமையுடன் தமிழ் அன்பர் கட்கு வழங்குகின்றார்.

அன்பர்கள் வரவேற்றுப் பயன் அடைவார்கள் என்று நம்புகின்றோம்.

— பதிப்பகத்தார்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| **சௌபாக்கியத்திற்கு சிவ வழிபாடு** | | |
| சிவ வழிபாடு | ... | 9 |
| சிவ மானச பூசை | ... | 16 |
| சிவராம சிந்தனை | ... | 29 |
| கவச தாரணை | ... | 34 |
| சிவ கவசம் | ... | 35 |
| **சௌபாக்கியத்திற்கு சக்தி வழிபாடு** | | |
| சக்தியே சித்தி தருவாள் | ... | 45 |
| தேவி மானச பூசை | ... | 51 |
| சக்தி போற்றிகள் - 108 | ... | 66 |
| சக்தி கவசம் | ... | 70 |
| பராசக்தி கவசம் | ... | 75 |
| தேவியைப் பரவுதல் | ... | 80 |

# 1. சிவ வழிபாடு

அனைத்துக்கும் ஆதியாகவும், அனைத்தின் விரிவாக வும், அனைத்தினும் உள்ளாகவும் நின்று, அனைத்தையும் இயக்குவதாகவும் அமைந்து விளங்கும் பரமசக்தி வேகம் எதுவோ, அந்தச் சக்திவேகத்தையே நாம் 'மகேஸ்வரன்' என்றும், 'ஆதிபகவன்' என்றும், 'பரம்பொருள்' என்றும், 'பரசிவம்' என்றும், இன்னும் பலப்பல பெயர்களாலும், நினைந்து, பரவிப் போற்றுகின்றோம்.

ஆதியும் அநாதியுமாகிய அந்த மகாசக்தி வேகமே அண்டங்கள் எண்ணிறந்தனவாகவும், அவற்றின் இயக்க மாகவும், நாம் வாழும் இந்தப் பெரும் புவனமாகவும் பூத்து மலர்ந்துள்ளது.

'ஆதி பகவன் முதற்றே உலகு' என்பது ஆன்றோர் அருள் வாக்கு.

ஆன்ம கோடிகளாக, வேறுவேறு உடல்களும் தன்மை களும் இயக்கங்களும் பெற்று இயங்கும் அனைத்தின் உள்ளேயும் உயிர்ப்பாக நின்று, அவையவை அவ்வற்றிற் கென விதிக்கப்பெற்ற விதியொழுங்குகளின் படியே வாழ்ந்து இன்புறவைப்பதும், அந்த ஆதியான சக்தியே யாகும்.

ஆன்ம கோடிகளை இயக்கும் அந்த ஆதிசக்தியே. அவற்றின் வாழ்வை நடத்துவிக்கக் கருதி, அவ்வவற்றிற்

குத் தேவையான, கோடிகோடியான பலவான பொருள் களையும் புவனத்தில் நிறைத்து வைத்துள்ளது.

அது அது, அதனதன் அமைப்பு நியதிப்படியே இசைவாக வாழ்ந்து போகுமானால், எந்தவிதமான அவலங்களும் குழப்பங்களும் ஏற்படக் காரணமே இல்லை.

ஆனால், அந்தப் பரம கருணாசாகரமான பரம்பொருள் மனித இனத்திற்குமட்டும் அறிந்துணரும் அறிவையும், அதனைத் தம்போற் பிறர்க்கும் உணர்த்தி அறியச்செய்யும் வாக்கையும் சிறப்பாகத் தந்துள்ளது. அதனை இயக்கும் உரிமையையும், அதன் வழியே செயற்பட்டு அடையும் நன்மைகளையும் தீமைகளையும் மனிதனுக்கு மட்டுமே அளித்திருக்கிறது.

ஆகவே, மனித சிந்தனை, அறிவுக்களத்திலே ஊறிப் பெருகிப் பரவி ஒளிவீசத் தொடங்கியது. மாயத்திரையை நீக்கி அறிவு ஒளிபெற்று உயர்ந்தவை மிகச்சில. திரை யிலேயே மயங்கிக் கிடந்து, அதுவே அறிவின் பயன் என்று, தமக்கும் பிறருக்கும் தொல்லைகளைப் பெருக்கு பவையோ, மிகமிகப் பல.

மனம், வாக்கு, காயம் என்ற மூன்றும் இணைந்து நின்று, உயிரின் உயர்வுக்கு உழைக்கவேண்டும் என்பதே ஆதிபரம்பொருளின் நியதி. ஆனால், சுதந்தர உணர்வு பெற்ற மனித இனம், இந்த மூன்று நிலைகளில் இயங்கினு லும், இவற்றைத் தனித்தனியாக வைத்துக் கொள்ளும் வஞ்சகத் திறனையும் எப்படியோ பெற்றுவிட்டது.

ஒன்றை மூன்றுக்கிப் பிரித்துப் பார்க்கவும் இயக்கவும் மனித இனம் அறிந்தபோது தொடங்கிய அவலம், நாளுக்குநாள் பெருகிவருகின்றதே அல்லாமல், மறைந்து,

மூன்றும் ஒன்றுகிவிடும் நிலையை அடையாமலேயே போய்க் கொண்டிருக்கின்றது.

*    *    *

உடல் நிலையற்றது; உள்ளேயிருக்கும் உயிர்தான் நிலையானது!

உயிரின் உணர்வுகள், மனத்தின் மூலமாக உடலுக்கு வந்து உடலை இயக்கும். உடலின் அவஸ்தைகள் மனவழியே சென்று உயிரையும் பாதிக்கும்.

ஆகவே, நல்வாழ்வை நாடுவோர் உடலையும், உள்ளமாகிய மனத்தையும், அதன் உள்நின்று இயக்கும் உயிரையும், நலமாகவும் உயர்வாகவும் வைத்துக்கொள்ளப் பாடுபட வேண்டும் என்று, ஞானிகள் மனித குலத்துக்கு உபதேசிக்கலானுர்கள்.

அதற்கு அவர்கள் பல வழிகளையும் காட்டினுர்கள். வழிகள் பலவானுலும், அவை முடியும் இடம் 'ஆதியை அறிதலும், அதனேடு கலத்தலும்' என்னும் ஒன்றேயாகும்.

*    *    *

இயற்கையின் இடையரு உந்துதல்களோடே இசைந்து வாழ்ந்து மடியும் உயிரினங்கள் இந்த உபாயத்தை வேண்டாதவை: உணரமாட்டாதவை. அவை ஆதிவகுத்த வழிமாறிச் செல்ல முயலவும் இல்லை; அதனுல் நிகழும் பலப்பல அவத்தைகட்கு உள்ளாவதும் இல்லை.

பசி, தற்காப்பு, தாய்மை என்ற மூன்றுடன் அவை நின்று விடுகின்றன. மனித குலம்போல எண்ணற்ற சிந்தனைகளை வலையாக விரித்துக் கொண்டு, அந்த வலைக்குள்ளே எதை எதையோ ஏய்த்துப் பிடித்துக் கொள்ளத் துடிக்கும் அகங்காரப் போக்கு, இயற்கை

நியதிகளைச் சிதைத்துத் தம்போக்கிலே இயக்கத் துடிக்கும் மனப்போக்கு, அவற்றிடம் அறவே இல்லை.

இந்த மனப்போக்கால் உருவான முயற்சிகளும், வளர்ச்சிகளும், அவலங்களும், ஏற்றத் தாழ்வுகளும் மனித குலத்தை மட்டுமே சூழ்ந்து வாட்டுகின்றன.

ஆனால், மனித குலத்தின் இந்த மனவளர்ச்சியும் மாறான போக்கும், மற்ற உயிர்க்குலங்களின் வாழ்வையும் அழிக்கவும், சிதைக்கவும் முற்பட்டன. இந்த அழிவு வெறியிலே மனிதன் தான் பிறவுயிர்களின் மேம்பட்டவனாகவும், தனக்காகவே பிறபிற உயிர்களை இறைவன் படைத்துள்ளதாகவும், ஒரு புதிய, தெய்வநியதிக்கு மாறுபட்ட ஆதிக்கக் கோட்பாட்டையும், தன் சுயநலவேகத்தால் வகுத்துக்கொண்டான்.

இதன்பின், சுயநலமும் அகங்கார உணர்வும் மனித இனத்தில் கொடிகட்டிப் பறந்தன. பிற உயிர்களை அடக்கித் தனக்குச் சாதகமாக்க முயன்ற மனித இனம், தனக்குள்ளேயே பலவாகப் பிளவுபட்டு, ஒன்றையொன்று அடித்தும் கொன்றும் அழித்தும் நடத்தும் வெறியாட்டைத் தொடரலாயிற்று.

இவற்றை 'விலங்குணர்வு வேகம்' என்று ஞானிகள் பலர் கருதினாலும், இவை விலங்குணர்வுபோல இயற்கை நியதியோடு பொருந்தி நடக்கும் இறைமை இயக்கம் அல்ல என்பதே உண்மையாகும்.

எந்த விலங்கினத்திடமும் மனிதனிடமுள்ள அளவு கடந்த தீயகுணங்களைக் காண வியலாது.

ஆகவே, அறிவென்னும் சக்தியைப் பெற்ற மனித இனம், அதை ஆக்கத்துக்குப் பயன்படுத்தாமல், அகங்

காரத்தோடு அழிவை நோக்கியே தீவிரமாகச் செலுத்திச் சீர்கெடல் ஆயிற்றென்பது மிகத் தெளிவாகும்.

இந்தக் கேடுகளிலிருந்து மனித இனத்தை விலக்கி நல்லபடி வாழவைக்க என்ன செய்வது?

*        *        *

உடலின் அவஸ்தைகளைப் பெருக்கவும் பெற்றுக் களிக்கவுமே மனவுணர்வைப் பயன்படுத்தும் மாயப் போக்கிலிருந்து, மனித நினைவை இறைமையோடு இணைக்க முயல வேண்டும்.

இறைமை உணர்விலே மனத்தை இழுத்துப் பிடித்துக் கட்டி நிறுத்தி விட்டால், இறைமை நினைவுகள் மேலோங்க மேலோங்க, மனமும், மனத்தாற் செலுத்தப் படும் வாக்கும் உடலும் இறைமைப் பணிகளிலேயே இசைந்து இனிமை காணும்.

உலகம் சதமென்ற உணர்வு கெட்டு, உயிரே சதம் என்ற நினைவு வலுக்கும். உயிருக்கு உய்தி வேண்டும் என்ற பற்று உண்டாகும்போது, பிற உடற்பற்றுக்கள் தாமே தளர்ந்து விலகிப் போகும்.

பிறவி வேண்டாத பெருநிலை, அப்போது தானே வாய்க்கும்.

வாழ்வாங்கு வாழ்ந்த மனிதராக விளங்கும் இவர்கள், தெய்வநிலை பெற்றுச் சிறந்திடுவார்கள்.

இந்தச் சிந்தனைகள், ஞான சித்தர்களின் உள்ளங் களில் நிரம்பி, அவை நல்லுபதேச நெறிகளாகப் பரந் துள்ளன. அவற்றை நாடிச் செல்ல மனத்தைப் பழக்க வேண்டும்.

*        *        *

இயற்கையின் எழுச்சியிலே தோன்றும் உணர்வுகளும் உந்துதல்களும் உடலையும் மிகவாகப் பாதிக்கின்றன.

அநுபவ அறிவும் உணர்வும் அந்த உந்துதல்களையும் உணர்வுகளையும் சாதக பாதகங்களாகப் பகுத்து ஆராய்ந்து, சாதகங்களைக் கொள்ளவும், பாதங்களை விலக்கவும் தூண்டுகின்றன.

இவற்றின் மேலான உள்ளுணர்வு மிகவும் விநோத மானது. இது தீமைகளை ஏற்கச் சமாதானங்களை எடுத்துக் காட்டியும், நன்மைகளை ஒதுக்க வேண்டிய காரணங்களை வற்புறுத்தியும் மனத்தை நெறிபிறழச் செய்வது.

இதற்குக் கா ர ண ம், இது, 'தான்' என்ற தற்போத வெறியிலே சிக்கிக் கிடப்பதுதான். தனக்கே எல்லாம் என்ற தற்செருக்கிலே மனப்போக்கை மாறிச் செல்ல வைப்பதுதான்.

இந்த அகந்தைக் கிழங்கை அடிவேரோடும் அகழ்ந்து எறிந்து விட்டால்தான், உண்மையறிவின் ஒளி மனத்திலே படர்ந்து ஒளிவீசத் தொடங்கும். இதை உள்ளே வைத்துக் கொண்டு, எவ்வளவு நூல்களைக் கற்றுப் படிப் பறிவைப் பரவலாக்கினாலும், ஒரு நன்மையும் உண்டா வதில்லை.

இதை வெல்லும் வழி என்ன?

இதுதான் மனத்தைச் சிவத்திலே கட்டிப் போட்டு மடக்கிவைத்துக் காப்பது.

இதற்கு மனத்துணிவான வைராக்கிய சித்தம் அவசியம் வேண்டும்.

கட்டிப் போட்ட மனம் கட்டறுத்துப் போகவே எப்போதும் துடிக்கும்.

இந்தத் துடிப்பை அடக்க, அதைச் சிவவழிபாட்டிலும், சிவ சிந்தனையிலும் தொடர்ந்து ஈடுபடச்செய்து வருதல் வேண்டும்.

இதற்கு உடலவஸ்தைகள் ஒத்துழைக்க மறுக்கலாம். அந்த அவஸ்தைகளை ஒடுக்கி, மனத்தைச் சிவத்திலேயே நிறுத்தும் உறுதியைக் காப்பாற்றுவது அடுத்த முயற்சி.

சிவனடியார்கள் நெருக்கமும் சிவசம்பந்தப்பட்ட திருக்கோயில்களுக்கும், பேச்சுக்கள் பாட்டுக்கள் நிகழும் இடங்களுக்கும் சென்று சுற்றுச் சூழல்களையும் சிவநினைவு செழிக்கச் சாதகமாக்கிக் கொள்வது மற்றும் ஒரு நல்ல முயற்சியாகும்.

எப்போதும் சிவநாமத்தையே சிந்திப்பதும், எல்லாம் சிவன் செயலே என்று உணர்வதும், எல்லாம் சிவமயமாகவே காண்பதும் மற்றொரு சிறந்த முயற்சி.

இவற்றினும் மேலாக, எண்ணத்திலே சிவத்தையே நிறுத்தி அதனையே மனமுருகப் பூசிப்பதும், மனங்கலந்து அதனைப் பாடிப் பரவி உருகுவதும் மிகமிக நல்ல முயற்சியாகும்.

இந்த முயற்சிக்கு ஊன்று கோலாக அமைவது மனத்தில் சிவத்தை நிறுத்திப் பூசிக்கும் 'மானச பூசை' ஆகும். அதனை எப்படிச் செய்வது என்பதை எடுத்துக் காட்ட முயல்வதே இந் நூலின் நோக்கம்.

'சித்தம் சிவமானால் சித்திகள் வசமாகும்' என்பது சத்தியமாதலால், 'சிவசித்தி' பெற உதவும் 'சிவ வழிபாடு' மேலானதாகும்.

அனைவரும் சிவசித்தியாளர்களாகிச் சிறந்து விளங்க இச் சிறுநூல் சற்றேனும் வழிகாட்டும்.

எல்லாம் சிவனருள்!

# 2. சிவ மானச பூசை

ஆதிக்கும் ஆதியாகிய அந்தப் பரம்பொருளே அனைத்துமாகியும், அகிலமாகியும் விரிகின்றது; அனைத்துக்கும் உள்ளொளியாகவும், உணர்வொலியாகவும் நிறைகின்றது; அனைத்தின் இயக்கமும் தன் இயக்கமேயாக, அனைத்தையும் தானே இயக்கிச் செலுத்தி, அதுவே நடத்தியும் வருகின்றது.

அதனையே நினைத்து, அதனையே போற்றி, அதனோடேயே நம்மையும் முழுக்கமுழுக்கக் கரைத்துக் கொண்டால், நம்மை இழந்து, நாமே அதுவாகி, அதுவே நாமாகி, சர்வசித்திகளையும் சர்வசக்திகளையும் நாமும் இங்கேயே, இப்பிறவியிலேயே, மிகவும் எளிதாகப் பெற்றுவிட முடியும்.

சொல்வதற்கு இது எளிதென்றாலும், இந்த நிலையைப் பெறுவதற்குத்தான், கோடானுகோடி பக்தர்கள் மிக வருந்தித் தவம் கிடக்கின்றார்கள் என்பதையும் மறுக்க முடியாது. அலைமோதும் உள்ளத்திலே, அசையாத சித்த வைராக்கியமும் தூய பக்தியும் இதற்கு அவசியம் வேண்டும்; இவற்றை அசைத்து அசைத்து நம்மைச் சோதித்து வீழ்த்துவதற்கு எத்தனையோ இழுவைகள் ஆன்சவடிவிலேயும் பாசவுருவிலேயும் இங்கே உள்ளன.

சிவமே நாமாகிவிடும் பரம ஆனந்தமும், சித்தச் சுத்தத் தெளிவும் நம்முள்ளே நிரம்பிவிட்டால், உலக

வாழ்வு, மயக்கம் நீங்கிய சிவானந்த வாழ்வாகவே மலர்ந்து, மணம்பரப்பவும் தொடங்கிவிடும்.

இதற்கு மகான்கள் கூறியுள்ள வழிகள் மிகப் பல.

அவற்றுள் மிகவும் எளிதானது எந்தச் செலவுமில்லா தது, அனைவராலும் செய்யக்கூடியது.

மனோ பாவனையாலேயே மகேசுவரனை மனத்திலே குடியேற்றிப் பூசித்து, அவன் அருளாலேயே மனத்தைக் கரைத்துக் கனியச்செய்து, மகாசக்திகளையும், மகாஆனந்த நிலையையும், உறுதியாக அவனருளால் அடைவதாகும்.

இந்த நிலைபெற்றவர் தெய்வசித்திகளை எல்லாமே பெற்றவராவர்! சர்வ வல்லமையும் கொண்டவராவர்! எதையும் நினைத்தபடியே நிகழ்விக்கும் சித்தபுருஷரும் ஆவர்! அன்பர்கள் இம்முயற்சியிலே கற்றுப் பயன்கண்டு உயரப் பரம்பொருள் கருணை செய்யுமாக.

ஆதிசங்கர பகவத் பாதரின் சிவமானச பூசையின் திருநிழலிலே தோன்றியவை இவை. அந்த மகானுக்கும் நம் வணக்கம் உரித்தாகுக!

## 1. பிறவியை விடவேண்டும்

பெருமானே! எளியேனின் உள்ளம் எனப்படுகின்ற தாமரை மலரினிடத்திலே, நித்தியமாகக் கோயில் கொண்டிருக்கின்றதும், உயர்ந்த வெண்பளிங்கினைப் போன்று ஒளிவீசுகின்றதும், ஆத்மலிங்க வடிவமானது மான நின்னையே, நான் இப்போது என்னுள்ளே நினைக் கின்றேன்.

வள்ளல் தன்மையே என்றும் தன் இயல்பானவனைப் போல, அளவில்லாத பெருங்கருணையினைச், சதா சர்வ

காலமும், சகலருக்கும், சகலவுயிருக்கும் பெய்வித்து, எனக்கும், யாவருக்கும், சிவகதியே அளிக்கின்ற, அழிதலே இல்லாத பரமானந்த சுகத்தையும் வழங்கு கின்ற, நின்னேயே, நான், இப்போது என் மனத்தகத்தே பற்றிக் கொள்ளுகின்றேன்.

'கரவு' என்பது கொஞ்சமேனும் பற்றுத 'முயற்சி' என்னும் மகாநதியினிடத்தே, கசடு என்பது முற்றவுமே நீங்கிய் என் மனமானது சென்று முகந்து கொணர்ந்த, சத்தியவெள்ளமாகிய புனிதநீரினேச் சொரிந்து, நின் பத்ம பாதங்களேக் கழுவி, நின்னே என் மனப்பீடத்திலே எழுந்தருளச் செய்விக்கின்றேன்.

சொல்லிலே காட்டிச் சொல்வதற்கும் இயலாத சிறப்பினதும், சொல்லிறந்து நிற்பதுமான 'மகாசமாதி' என்னும் நினக்கு மிகவும் உவப்பான மலரினே, நின் திருவடிகளிலே பெய்து அருச்சித்து, மகா யோகேஸ்வரனு கிய நின்னேப் பணிந்து போற்றுகின்றேன்.

விட்டு விடுதலுக்கும் அரியதானதும், என்னேயே மிக மிக வன்மையோடே வந்து பற்றிக் கொண்டிருப்பதுமான, இந்தப் பிறவி என்னும் பெரிய கட்டிலிருந்து நான் முழுக்கவும் விடுபட்டு, நித்தியானந்த நிலேயிலேயே சதா சர்வமும் இன்புற்றிருப்பதற்கு, எனக்குக் கருணேகாட்டுவா யாக என்று, நின்னேயே வேண்டுகின்றேன்.

உள்ளமெனும் மலரதனுள் உறைவா னுகி
உயர்பளிங்கே எனவொளிரும் லிங்கம் நின்னே
வள்ளலென வையமெலாம் வழங்கி யாரும்
வாழ்ந்தபினே சிவகதியிற் சேர்க்கும் நின்னேக்
கள்ளமிலா முயற்சிநதி நீராற் பாதம்
கழுவியபின் நினேவெல்லாம் ஒடுக்கி யார்க்கும்
விள்ளவிலாச் சமாதிமலர் தூவிப் போற்றி
விடலரிய பிறவிவிட வேண்டு வேனே!

## 2. மலர்சூட்டி வழிபடுவேன்

பெருமானே! கருணையே கடலாகப் பொங்கிப் பெருகி வருகின்றது போன்ற, மகாப் பெரிய அருள்வெள்ளத்தின் ஊற்றிடமே யானவனே! என்னை ஆளாக உடையவனே!

நீதான் அமர்ந்தருள்வதற்கென்றே, கவர்ச்சிமிகுந்த மணிவகைகள் பலவும் பதித்துள்ள, உயர்வான செம் பொன்னாலான இருக்கையை, நினக்கு நான் அளிக்கின் றேன். அதில் நீயும் அமர்வாயாக!

அதன்பால் நீயும் அருளோடே அமர்ந்ததும், நறுமண மிகுந்த பனிநீரினாலே நினக்குத் திருமுழுக்காட்டுதலைச் செய்விக்கின்றேன்.

ஈரம் போக நின் திருமேனியைத் துடைத்தபின், உயர்ந்த செவ்வண்ணப் பட்டினை, நினக்கு உடுத்து கின்றேன்.

நின் திருமேனிக்கு, அழகுமிகுந்த நவமணிகள் இழைத்துச் செய்த எழிலான நகைகள் பலவற்றையும் பூட்டி, அவை நின் திருமேனியின் செவ்விய ஒளியிலே, மேலும் அழகும் ஒளியும் சேரப்பெற்று விளங்கக் கண்டு நான் பெரிதும் ஆனந்திக்கின்றேன்.

கஸ்தூரி சேர்த்து அரைத்த செஞ்சந்தனச் சாந்தினை, நின் திருமேனியிலே மணக்க மணக்கப் பூசி விடுகின்றேன்.

மாசுமருவற்ற மல்லிகை, சண்பகம், வில்வம் ஆகிய வற்றை, உவப்புடனே, நின் திருமேனியிலே அழகுறச் சார்த்தியும், நின் திருவடிகளிலே பணிவோடு சொரிந்தும், நின்னைப் போற்றிப் பணிகின்றேன், பெருமானே! இவற்றை நீயும் ஏற்றருள்க!

கருணைவெளத் தூற்றிடம்நீ இருத்தற் கென்றே
கவின்மணிசேர் பொன்னிருக்கை கடிதே வைப்பேன்
உருகுபனி மணநீரால் முழுக்கே யாட்டி
உயரியசெம் பட்டிடையில் உடுத்துக் காண்பேன்
திருமணிசேர் நகைபலவும் சிறக்கப் பூட்டிச்
செஞ்சாந்திற் கத்தூரி கலந்தே பூசி
மருவிலவாம் மல்லிசெண் பகம்வில் வங்கள்
மலரடிக்கும் மேனிக்கும் சூட்டல் செய்வேன்!

## 3. குளிர்நிழல் வேண்டுவேன்

பெருமானே! என் மனத்தை, நின்னையே நோக்கி, ஒரு முனைப்போடே பொருந்திச் சேருமாறும், நின்னிடத்தேயே அது நீங்காமல் என்றும் நிலைத்துவிடுமாறும் செய்விக்கின்றேன்.

மாற்றமேதும் உடலிலோ உள்ளத்திலோ நேராத மகா சமாதிநிலையிலே முற்றவும் ஒடுங்கி இருந்தேனாய், நின்னையே என்னுள்ளே கண்டு கண்டு விருப்போடும் களிக்கின்றேன்.

சினத்தை வெற்றிகொண்டு விட்டதனாலே மிகமிகத் தெளிவாகியிருக்கும் என் உள்ளத்திலே, உறுதியாக மேற்கொண்ட முனைப்பினோடே, சிறந்த நறுமணமுள்ள பூத்தம் புதுமலர்கள் பலவற்றையும் நின் செவ்விய பாத மலர்களிலே மீண்டும் தூவி, நின்னை அருச்சித்துப் போற்றுகின்றேன்.

பாழான இருண்ட காட்டையே போல்வதான, கொடுமையே எப்புறமும் சூழ்ந்திருக்கும் இவ்வுலகத்து வாழ்க்கையிலே, மீண்டும் மீண்டும் வந்து சேர்கின்ற பிறவியாகிய வஞ்சனைகள் எல்லாம், என்னைவிட்டு அறவே

அகலும்படியாக, அருளும்படியாக வேண்டி, நின்னை வழிபட்டுப் போற்றுகின்றேன்.

நின் திருக்கண்ணின் அருள் பொழியும் சிறு நோக்கினை எளியேனாகிய என்பாலும் செலுத்தி அருளுமாறு, நின்னை மிகமிக வணக்கத்துடனே பணிந்து வேண்டி வழிபடுகின்றேன்.

என்னைச் சுற்றியுள்ள என் உறவும், சுற்றமும், பொருளும், பிற எல்லாமும், எனக்குத் தொடர்பற்றவை என்று, அறவே நான் அவற்றினை மறந்து விட்டேன். என் உறவு இனி நீயே என்றும் உறுதியாகக் கொண்டு விட்டேன்.

நின்னுடைய இனிதான திருவடி நிழலையே, எப்போதும் சேர்வதற்கு விரும்பி, எனக்கு இனிதான இருப்பிடமாகவும் தந்தருளுமாறு நின்னை மிகவும் யாசிக்கின்கின்றேன்!

மனத்தையொரு முகமாக்கி நின்னிற் சேர்த்தேன்
மாறில்லாச் சமாதிதனில் நின்னைக் கண்டேன்
சினத்தைவெலுந் தெளிவுளத்திற் சிரத்தை சேர்த்தேன்
சீர்மலர்கள் நின்னடியிற் சொரிந்தேன் பாழும்
வனத்தை நிகர் வாழ்வெனுமிவ் வுலகில் மீண்டும்
வராவகைநின் அருள்நோக்கை வணங்கிக் கேட்டேன்
இனத்தையினி அறமறந்தேன் இறையே நின்றன்
இன்னடியின் குளிர்நிழலே இச்சித் தேனே!

## 4. சிவசிவவோ சிவசிவவோ!

பெருமானே! பசுவின் நெய்யைச் சேர்த்ததும், இனிதானதும், சுவைமிகுந்ததும் அறுசுவையோடுங் கூடியது

மான திருவமுதினை இனிய பலகார வகைகளுடன் நீ திரு வமுது செய்வதற்காக நின் திருமுன்னே படைக்கின்றேன்.

வகை வகையான தொடுகறி வகைகளையும், பருகு தற்கு இனியவான பாயச வகைகளையும் நின்முன்னே உவப்போடும் வைக்கின்றேன்.

தேன் கனிகின்ற மா பலா கதலி என்னும் முப்பழங் களும், சேதாவின் நறும்பாலும், செம்பொன்னின் கிண் ணங்களிலே பெய்து நின் திருமுன்னே வைக்கின்றேன்.

செவ்விளநீர்க் காய்களைக் கொணர்ந்து, வெட்டித் திருத்தி, நீ பருகுவதற்காக நின்முன்னே படைக்கின்றேன்.

நீ உவப்பாக அமுதுசெய்து முடித்த பின்னர், நின் திருவாயை நீர்ப்பூசித் துடைத்து மகிழ்கின்றேன்.

நின் செவ்விதழ்கள், மேலும் செவ்வொளி பெறுமாறு நினக்குத் தாம்பூலச் சுருளும் அளிக்கின்றேன்.

இவற்றை நீயும் அருளோடே ஏற்றுக் களித்திருக்கும் அந்தக் காட்சியின் பேரானந்தத்திலே, என்னையே முற்றும் மறந்தவனாக 'சிவ சிவவோ! சிவ சிவவோ?' என்று கூவி, நின் புகழையும் முழக்கம் செய்கின்றேன்.

ஆன்நெய்சேர் அமுதோடே பலகாரம் பலவும்
அமைவான தொடுகறிகள் பாயசத்தின் வகையும்
தேன்சொரிமுப் பழங்களொடே சேதாவின் பாலும்
திருவமுதே செய்கவென நின்முன்னே வைத்தேன்
வான்தெங்கின் செவ்விளநீர் பருகுதற்குத் தந்தே
வாய்பூசி உண்டபினே வள்ளால்நின் செவ்வாய்த்
தேன்இதழ்கள் சிவப்பேறத் தாம்பூலந் தந்தே
சிவசிவவோ சிவசிவவோ எனப்போற்றித் தொழுவேன்!

## 5. இசைமுழக்கி ஏத்துவேன்!

பெருமானே! ஓரத்திலே முத்துக்களைக் கோத்துத் தொங்கவிட்டிருக்கின்ற, வெண் பட்டுக் குடையினை நினக்கு அது நிழல் செய்யுமாறு, அதனை விரித்துப் பிடித்திருக்கின்றேன்.

விசிறி சாமரம் என்பவை கொண்டு, மெல்லிய சுகந்தமான காற்று நின்மேனியை இதமாகத் தழுவிச் செல்லும்படியாக, நினக்கு விசிறி விடுகின்றேன்.

செவ்விய செம்பட்டைப் போன்று விளங்கும் நின் திருமுகத்தின் பேரழகினை, நீயும் உவகையோடே கண்டு மகிழ்வதன் பொருட்டாக, தெளிவாக வடிவங்காட்டும் வெண்பளிங்கினை, நினக்குமுன் ஏந்திப் பிடித்தும் நிற்கின்றேன்.

பண்ணிலே இனிமை பொழிகின்ற வீணையின் இனிதான நாதத்தோடு, குரல்வகைகள் பலவும் எழுப்பும் நாத வெள்ளம் பலவும் கலந்து எழச்செய்து, நினக்கு இசையாலே மகிழ்ச்சி யூட்டுகின்றேன்.

பேரிகை எக்காளம் உடுக்கை மணி சங்கம் ஆகியவை அனைத்தும் ஒருங்கே சேர்ந்து பெரிதாக முழக்கமிடுமாறு செய்து, நின்னை அந்த நாத வழிபாட்டினாலேயும் வழிபட்டு போற்றுகின்றேன்!

வெண்பட்டில் முத்திழைத்த விரிகுடையே பிடிப்பேன்
விசிறியொடே சாமரங்கள் விசிறி இதம் அளிப்பேன்
செம்பட்டின் எழில்முகத்துச் செவ்விதனைக் காணச்
செவ்வுருக்காட் டும்பளிங்கை நின்னெதிரே பிடிப்பேன்
பண்சொட்டும் வீணையொடு குழலிசையும் பேரி
பாங்கான எக்காளம் சங்குடுக்கை மணியும்
விண்முட்டும் ஒலிமுழக்க விமலவுனைப் போற்றி
விரிசடையாய் நின்னருளே வேட்டுமிகப் பணிவேன்!

## 6. ஏற்றருள்க சிவமே!

பெருமானே! என் உள்ளேயே அமர்ந்து, என் உயிரை யும் தூண்டி இயக்குகின்ற, என் உயிரின் உள்ளுயிராக என்றும் நிலவுகின்றவனே! என்னுள்ளேயும், நின் செவ்விய ஞான ஒளியினைப் பரப்பி, என் அறியாமை என்னும் இருளைப் போக்கியவனே!

என் புத்தியானது, நின்னைவிட்டு என்றும் பிரியாமல் எப்போதும் விளங்குகின்ற பாகம்பிரியாளான மகாசக்தி யின் இருப்பிடமே யாகும்.

என்னுள்ளே சென்று சென்று என் பிராணனுக்கு வலுவேற்றி வருகின்ற 'பிராணன்' என்னும் காற்றும், நீ ஏவப் பணிசெய்யும் கருவிகளுள் ஒன்றே யாகும்.

என் இவ்வுடலானது, நீ அமர்வதற்கென்று நீயாகவே, என் பேராலே அமைத்து வைத்துள்ள, நினக் குரியதான ஒரு திருக்கோயிலே யாகும்.

இந்த, ஒன்பது ஓட்டைகளையுடைய உடலான குடிசையிலே உற்சாகமாகக் குடியிருந்துகொண்டு, நான் செய்துவரும் பலவிதமான செயல்களும், நான் எண்ணி வரும் எண்ணற்ற எண்ணங்களும், எல்லாமே நின் கருணைப் பிரவாகத்தினாலே எழுகின்ற சிற்றலைகளின் வீச்சுக்களே யாகும்.

இவ்வாறு, என்னுடலையும் என்னுயிரையும் நினக்கே முற்றவும் சரணாக்கிக் கொண்டுவிட்டதனாலே, என்னைத் துறந்து நினதேயாகிவிட்ட யான், இணையில்லாத இன்பத் தையும், நிம்மதியையும் பெற்றுக் களிக்கின்றேன்.

என் மனோபாவனையில் மட்டுமே, நின்னை வேண்டி நான் செய்து வந்த இந்த எளிய வழிபாட்டினையும், மகேஸ்வரனாகிய நீயும் மனமுவந்து ஏற்றுக் கொள்வாயாக பெருமானே!

என்னுளத்தில் உயிர்க்குயிராய் இருந்தியக்கும் சிவமே
என்புத்தி சக்தியவள் இருப்பிடமாக் கொள்வேன்
என்னுள்ளில் இழைந்தோடும் காற்றுமுன தருளால்
ஏவுபணி தொடர்ந்தாற்றும் கருவியென நினைப்பேன்
நின்குடிலாம் இவ்வுடலால் மனமதனால் செய்யும்
நிகழ்ச்சியெலாம் நின்செயலாய் நிம்மதியே காண்பேன்
என்னுளத்தில் பாவனையால் நினைநினைந்தே போற்றும்
எளியவழி பாடிதனை ஏற்றருள்க சிவமே!

## 7. நினைப் போற்றலே கடன்

பெருமானே! என் வாயிலிருந்து வெளிப்படும் சொற்கள் எல்லாம் நின் திருநாமத்தைச் சொல்லும் சொற்களாகவே வெளிவர வேண்டும்!

என் மனத்திலே அலையலையாக எழுந்தெழுந்து பெருகிவரும் ஆசைகள், நின் பதமலர்களைப் பற்றிக் கொள்ளுகின்ற பேராசைகளாகவே, எப்போதும் விளங்க வேண்டும்!

நான் பார்ப்பனவும் கேட்பனவும் பயில்வனவும் நுகர்வனவுமாகிய எல்லாமே, பராபரனாகிய நின்னுடைய திருவருள் தந்த பரிசுகளே என்று கருதுகின்ற பக்குவம் எனக்கு வரவேண்டும்.

இவை என் செயலென மயங்கி, இனி எவ்வகையான ஆர்ப்பாட்டமும் நான் செய்யாத நிலையினனாக, இனி ஆகவேண்டும்.

அகமே சிவமயமாய்] என்றும், எப்போதும் 'அரனே யோ அரனேயோ!' என எடுத்து முழக்கி, நின்னையே துதிக்கின்ற செயலையே உடையவனாய், என்னை, எப் போதும் நினக்கே தொழும்பாக்கி, நான் ஆனந்தமய மாகத் திகழவேண்டும்!

எனக்கு, நின் திருவடி தீட்சையினைத் தந்து, என்னை யும் ஆட்கொள்வாய் பெருமானே என்று நின்னை வேண்டு கின்றேன்.

சிவசிவவோ! சிவசிவவோ! என்று எப்போதும் நின்னையே வாழ்த்துகின்றேன், பெருமானே!

வார்த்தையென வருவவெலாம் நினைவாழ்த்தல் வேண்டும்
வருமனத்தில் எழுமாசை நினைப்பற்றல் வேண்டும்
பார்த்தலொடே கேட்டிடுவ பயின்றிடுவ நுகர்வ
பராபரநின் பரிசென்றே யான்கருதல் வேண்டும்
ஆர்த்தெழுதல் அறவொழிந்தே அகஞ்சிவமே யாகி
அரனேயோ அரனேயோ எனமுழக்கல் வேண்டும்
சேர்த்திடுதல் கழித்திடுதல் உன்சித்தம் சிவனே
சேவித்தே வாழ்த்த லென்றன் செய்கடனே என்பேன்!

## 8. உயர்கதி தருவாய்!

நின்னிடத்தே நீங்காத பேரன்பினை எப்போதும் உடையவர்களின் உள்ளமாகிய திருக்கோயிலிலே, நீயும் விரும்பிவந்து நிலையாக வீற்றிருந்தருளும் அருளாளன் அன்றோ, பெருமானே!

அப்படி வந்து வீற்றிருந்து, அவரை முற்றவும் நினதாக்கிக் கொள்ளுவதிலேயே ஆராத விருப்பத்தையும் உடையவனும், நீதானே!

நின்னையே ஆண்டானாகக் கொண்டுவிட்ட அடியவர் களுக்கு, நீயே அடியவனாகி, அவர்கள் விரும்பும் பணியை

நின் பணியாகவே செய்து உவப்படையும் எளிமையான வனும், நீயல்லவோ!

உயிர்க்குலத்தின் மீதிலே ஊறிச்சுரக்கின்ற பெரிதான அன்பிலே கசிந்து உருகும் கருணாசாகரனும், நீயல்லவோ.

பக்திமான்களின் பாடல்களிலே பயின்று வரும் சொல்லும் பொருளுமாகப் படர்ந்துநின்று, அவர் பாடிப் பாடிப் பரவசமடையக் கேட்டுக் கேட்டுப் பரவசம் அடையும் கீர்த்தியாளனும், நீயல்லவோ!

எட்டுத் திசையிலும் இருக்கின்றவர்கள் எல்லாரும், மனங்கலந்து ஏத்திஏத்தித் துதிக்கின்ற ஏகமான பொரு ளானவனே! எம் தமிழேயாகி, எம் உள்ளத்தும், எம் காதுகளிலும், இனிமையும் ஞானமும் சேரச் செய்பவனும் நீயே அன்றோ!

எவ்வுயிர்க்கும் உயிர்ப்பாகி நின்று, அவ்வவற்றை இன்புறச் செய்தலிலே இன்புறும் இனியவனும் நீயல் லவோ!

நின் திருவடிகளே புகலாகக் கொண்டு, நின்னையே என் உளமாரப் போற்றுகின்றேன். எனக்கு என்றும் உறு துணையாகி நின்று என்னையும் காத்து அருள்வாயாக, ஈசனே!

அன்புடையார் அகமுனக்கோர் கோயிலெனக் கொள்வாய்
அடியவர்தம் அடியனென அகங்கனிந்தே செல்வாய்
பண்புடையார் பங்கினிலே பக்கபலம் ஆவாய்
பக்தர்சொலும் பாடலிலே படர்ந்தொலித்தே களிப்பாய்
எண்திசையும் இசைந்தேத்தும் ஏகபரம் பொருளே
எந்தமிழே எவ்வுயிர்க்கும் இனிதளிக்கும் இன்பே
உன்னடியே உறுபுகலாய் உளமேற்றே வாழ்வேன்
உமாபதியே உயர்கதியே உவந்தெனக்கும் தருவாய்!

## 9. சிவசித்தி சித்திப்பதாக!

இந்த உரைநடையையும் செய்யுள்களையும் உளங் கலந்து தினமும் ஓதுங்கள்; அதில் கிரியைகள் வரும்போது, அவற்றை நீங்களே பணிவோடு செய்வது போலவே மனம் ஒன்றிப் பாவித்துப் பரமனைப் பூசியுங்கள்.

இந்தப் பாடல்களைப் பக்தியோடு பாடுங்கள்! பாடப் பாட மனத்தின் பாரம் குறையும்; சிவசித்தியும் உங்களுக்குச் சிறப்பாக வாய்க்கும்.

தினங்காலை மாலைதனில் சிந்தைதனை ஒடுக்கித்
தித்திக்கும் சிவபூசைச் செயலினிலே நிற்பீர்!
மனம்மாலை விட்டொழிய மமதையதும் மாய
மங்காத ஞானமெனும் ஒளிசுடரும் வாழ்வில்
இனம்நாடும் இச்சையொடு எண்ணிலாப் பற்றும்
இருக்கஇடம் தேடியவாய் இரிந்தோடிச் செல்லும்
கனம்ஓடக் களிபெருகும் சிவமயமே சேரும்
கலிதொலையும் சித்தியெலாம் கைவசமாம் தானே!

## 3. சிவநாம சிந்தனை

சிவனின் திருநாமங்களையும், பெருமைகளையும் வாயினிக்கப் போற்றி வரம் பெறவும், வாழ்த்தி மலர்தூவி வழிபடவும், இதன் பின்வரும் போற்றி 108உம் உங்களுக்கு உதவும். நினைவில் நிற்க வசதியாக அவை அமைந்துள்ளன. பாடிப் பாடிப் பரவவும், பணிந்து உவந்து போற்றவும் பரமனருள் சித்திக்கும் என்பது திண்ணம். ஒவ்வொரு துதியின் முன்னும் 'ஓம்' சேர்த்து, 'ஓம் அம்மையே அப்பா போற்றி' என்றாற்போலச் சொல்லுக.

ஒவ்வொரு போற்றி முடிந்ததும், வில்வத் தழையோ மலரோ இறைவன் பாதங்களில் இட்டு அருச்சிப்பதுபோல் மனப்பூர்வமாகப் பாவிக்கவும்.

### போற்றிகள்—108

அம்மையே அப்பா போற்றி
அளவிலா அருளே போற்றி
அன்பெனும் மலையே போற்றி
அடியவர் துணையே போற்றி
அணுவினுள் அணுவே போற்றி
அண்டங்கள் கடந்தாய் போற்றி
அகரமே அறிவே போற்றி
அறிந்திடும் மொழியே போற்றி
அகத்தனே போற்றி போற்றி!

அலைகடல் விரிவே போற்றி
அழகனே அமுதே போற்றி
அரும்பிறை அணியாய் போற்றி
அவிரொளி சடையாய் போற்றி
அகஞ்சுடர் விளக்கே போற்றி
அகந்தைநோய் அழிப்பாய் போற்றி
அருமறை வடிவே போற்றி
அருந்தவர் முடிவே போற்றி
அரஹரா போற்றி போற்றி! 18

ஆதியே அமரா போற்றி
ஆலால கண்டா போற்றி
ஆதாரப் பொருளே போற்றி
ஆலமர் குருவே போற்றி
ஆலவாய் அப்பா போற்றி
ஆரூரில் தியாகா போற்றி
ஆட்டமே உகப்பாய் போற்றி
ஆடரவு அணிவாய் போற்றி
ஆற்றலே போற்றி போற்றி! 27

இனியவர் உளத்தாய் போற்றி
இருட்கறை மிடற்றாய் போற்றி
இருவினை தவிர்ப்பாய் போற்றி
இரக்கமே வடிவாய் போற்றி
இனியசெந் தமிழே போற்றி
இலக்கிய வளமே போற்றி
இமயவள் பங்கா போற்றி
இன்னல்கள் களைவாய் போற்றி
இறைவனே போற்றி போற்றி! 36

இதயத்தே கனிவாய் போற்றி
இனிமையே நிறைப்பாய் போற்றி
இனியவர் மனத்தாய் போற்றி
இடபவா கனத்தாய் போற்றி
ஈந்தருள் நாதா போற்றி
ஈடிலாப் பிரானே போற்றி
ஈமத்தே குனிப்பாய் போற்றி
ஈசானத் துறைவாய் போற்றி
ஈசனே போற்றி போற்றி! 45

உலகத்தின் முதலே போற்றி
உள்ளெரி நுதலாய் போற்றி
உள்ளொளிர் சுடரே போற்றி
உண்பவர் உணவே போற்றி
உடுக்கையின் ஒலியே போற்றி
உடைகரித் தோலாய் போற்றி
உரைபொருள் நலமே போற்றி
உருவிலா அருவே போற்றி
உடையனே போற்றி போற்றி! 54

ஊரெல்லாம் உவப்பாய் போற்றி
ஊட்டுவல் விதியே போற்றி
ஊங்கார நாதா போற்றி
ஊக்கிடும் உணர்வே போற்றி
எல்லையில் எழிலே போற்றி
எரிதவழ் விழியாய் போற்றி
எண்குண வடிவே போற்றி
எமதுளக் கனியே போற்றி
எம்பிரான் போற்றி போற்றி! 63

ஏகநா யகனே போற்றி
ஏதிலார் புகலே போற்றி
ஏத்துவார் மனத்தாய் போற்றி
ஏர்முனைச் செல்வா போற்றி
ஏந்திடும் மழுவாய் போற்றி
ஏகம்பத் துறைவாய் போற்றி
ஏக்கமே களைவாய் போற்றி
ஏற்றத்தின் ஊற்றே போற்றி
ஏந்தலே போற்றி போற்றி! 72

ஐயனே அரனே போற்றி
ஐம்பூத வடிவே போற்றி
ஐம்புலன் அவிப்பாய் போற்றி
ஐயங்கள் களைவாய் போற்றி
ஒப்பிலா மணியே போற்றி
ஒளியெறி நுதலாய் போற்றி
ஒள்ளிழை பாகா போற்றி
ஒண்குழைக் காதா போற்றி
ஒப்பிலாய் போற்றி போற்றி! 81

ஓதுவார் உளத்தாய் போற்றி
ஓதிடும் பொருளே போற்றி
ஓய்விலாக் கூத்தா போற்றி
ஓமென்னும் ஒலியே போற்றி
ஓசையின் முதலே போற்றி
ஓங்கிடும் இசையே போற்றி
ஓதுசெந் தமிழே போற்றி
ஓணத்தான் துணையே போற்றி
ஓய்விலாய் போற்றி போற்றி! 90

கறைதவழ் கண்டா போற்றி
காலனை உதைத்தாய் போற்றி
காமனை எரித்தாய் போற்றி
கந்தனைத் தந்தாய் போற்றி
கற்றைவார் சடையாய் போற்றி
கழுமலத் திறையே போற்றி
கண்கள்மூன் றுடையாய் போற்றி
கருணைமா கடலே போற்றி
கர்த்தனே போற்றி போற்றி! 99

சிவமெனும் பொருளே போற்றி
செவ்வொளி வடிவே போற்றி
பவமெலாம் தவிர்ப்பாய் போற்றி
பரமெனும் பொருளே போற்றி
தவநிலை முடிவே போற்றி
தண்பதம் தருவாய் போற்றி
நிலையருள் நித்தா போற்றி
நின்மல வாழ்வே போற்றி
நிகரிலாய் போற்றி போற்றி! 108

## 4. கவச தாரணை

சான்றோர்கள் சிவநினைவு செழிக்கப் பல வழிகளை நமக்குக் காட்டுகின்றார்கள்.

அவற்றுள் நாம் இதுவரை கற்ற, 'சிவமானச பூசை', மனத்தைச் சிவமயாக்கித் தானே சிவமயமாகி உயரும் உன்னத பாவனா பூசையாகும்.

மானச பூசையில் பாவனையே முதன்மையானது.

108 போற்றிகள் சிவனின் சீர்களைப் போற்றித் துதிப்பதன்மூலம், மனத்திலே கொண்டு பூசித்த பெருமானை ஆண்டவனாகக் கொண்டு, அகம் கலந்து துதிப்பதாகும். இதனால், அவன் உளம் மகிழ்வான். துதிப்பவர் உள்ளமும் இறைமை வசமாகும். இறையருளும் இனிது வாய்க்கும்.

அடுத்து, மானசா பூசாமுறையிலே, மிகவும் சிறந்த தான சிவ கவசத்தை ஓதித் தன்னைப் பாதுகாத்து உய்தல் ஆகும்.

சிவமே நம்முடைய உடலையும் செயலையும் வாழ்க்கையும் காத்து நின்று, நம்மை நல்வாழ்வில் நிறுத்துவதாகக் கொள்ளும் சிறந்த பாவனை இது.

சான்றோர்களாலும் சாதாரணர்களாலும் பல காலங்கள் ஓதிப் பயனடைந்த உயர்வும், சக்தியும் உடையதும் இந்தச் சிவகவசம்!

## 5. சிவ கவசம்

1

பங்கயத் தவிசின் மேவி
யிருந்துடற் பற்று நீக்கி
அங்குநற் பூத சுத்தி
அடைவுடன் செய்த பின்னர்க்
கங்கையைத் தரித்த சென்னிக்
கற்பக தருவைச் செம்பொற்
கொங்கைவெற் பனைய பச்சைக்
கொடியொடும் உளத்தில் வைத்தே!

2

அகிலநா யகனுய் ஞான
வானந்த ரூபி யாகித்
துகள்தரும் அணுவாய் வெற்பின்
தோற்றமாய் உயிரை எல்லாம்
தகவுடன் அவனி யாகித்
தரிப்பவன் எம்மை இந்த
மகிதலம் அதனில் தீமை
மருவிடா தருளிற் காக்க.

3

குரைபுனல் உருவம் கொண்டு
கூழ்தொறும் பயன்கள் நல்கித்
தரையிடை உயிர்கள் யாவும்
தளர்ந்திடா வண்ணம் காப்போன்
நிரைநிரை முகில்கள் ஈண்டி
நெடுவரை முகட்டிற் பெய்யும்
விரைபுனல் அதனுள் வீழ்ந்து
விளிந்திடா தெம்மைக் காக்க.

4

கடையுகம் தன்னில் எல்லா
உலகமும் கடவுட் டீயால்
அடலைசெய் தமலை தாளம்
அறைதர நடிக்கும் ஈசன்
இடைநெறி வளைதா பத்தில்
எறிதரு சூறைக் காற்றில்
தடைபடா தெம்மை இந்தத்
தடங்கடல் உலகிற் காக்க!

5

தூயகண் மூன்றி னோடு
சுடரும்பொன் வதனம் நான்கும்
பாயுமான் மழுவி னோடு
பகர்வர தாப யம்கண்
மேயதிண் புயங்கள் நான்கும்
மிளிருமின் அனைய தேசும்
ஆயதற் புருடன் எம்மைக்
குணதிசை யதனிற் காக்க.

6

மான்மழு சூலம் தோட்டி
வனைதரும் அக்க மாலை
கூன்மலி அங்குச சம்நீத்
தமருகம் கொண்ட செங்கை
நான்முக முக்கண் நீல
நள்ளிருள் வருணம் கொண்டே
ஆன்வரும் அகோர மூர்த்தி
தென்திசை யதனிற் காக்க.

7

திவண்மறி யக்க மாலை
செங்கையோ ரிரண்டும் தாங்க
அவிர்தரும் இரண்டு செங்கை
வரதம்தோள் அபயம் தாங்கக்
கவினிறை வதனம் நான்கும்
கண்ணொரு மூன்றும் காட்டும்
தவளமா மேனிச் சத்தியோ
சாதன்மேற் றிசையிற் காக்க.

8

கறைகெழு மழுவும் மானும்
அபயமும் கண்ணின் நாமம்
அறைதரு தொடையும் செய்ய
அங்கைகள் நான்கும் ஏந்திப்
பொறைகொள் நான் முகத்து முக்கண்
பொன்னிற மேனி யோடும்
மறைபுகழ் வாம தேவன்
வடதிசை யதனிற் காக்க.

9

அங்குசம் கபாலம் சூலம்
அணிவர தாப யங்கள்
சங்குமான் பாசம் அக்கம்
தமருகம் கரங்கள் ஏந்தித்
திங்களிற் றவள மேனி
திருமுகம் ஐந்தும் பெற்ற
எங்கள் ஈசான தேவன்
இருவிசும் பெங்கும் காக்க.

10

சந்திர மவுலி சென்னி;
தனிநுதற் கண்ணன் நெற்றி;
மைந்துறு பகன்கண் தொட்டோன்
வரிவிழி; அகில நாதன்
கொந்துணர் நாசி; வேதம்
கூறுவோன் செவி; கபாலி
அந்தில்செங் கபோலம்; தூய
ஐம்முகன் வதனம் முற்றும்.

11

வளமறை பயிலு நாவன்
நா; மணி நீல கண்டன்
களம்; அடு பிஞக பாணி
கையிணை; தரும வாகு
கிளர்புயம்; தக்கன் யாகம்
கெடுத்தவன் மார்பு; தூய
ஒளிதரு மேரு வில்லி
உதரம்;மன் மதனைக் காய்ந்தோன்.

## 12

இடை;இப முகத்தோன் தாதை
யுந்தி;நம் ஈசன் மன்னும்
புடைவளர் அரைகு பேர
மித்திரன் பொருவில் வாமம்;
படர்சக தீசன் சானு;
பாய்தரும் இடப கேது
மிடைதரு கணைக்கால்; எந்தை
விமலன்செம் பாதம் காக்க.

## 13

வருபகன் முதல்யா மத்து
மகேசன்பின் இரண்டாம் யாமம்
பொருவரும் வாம தேவன்
புகன்றிடும் மூன்றும் யாமம்
செருமலி மழுவாள் அங்கைத்
திரியம்பகன் நாலாம் யாமம்
பெருவலி யிடப ஊர்தி
பிணியற இனிது காக்க.

## 14

கங்குலின் முதல்யா மத்துக்
கலைமதி முடித்தோன் காக்க
தங்கிய இரண்டாம் யாமம்
சானவி தரித்தோன் காக்க
பொங்கிய மூன்றும் யாமம்
புரிசடை அண்ணல் காக்க
பங்கமில் நாலாம் யாமம்
கௌரிதன் பதியே காக்க.

15

அனைத்துள காலம் எல்லாம்
அந்தகற் கடிந்தோன் உள்ளும்
தனிப்பெரு முதலாய் நின்ற
சங்கரன் புறமும் தாணு
வனப்புறு நடுவும் தூய
பசுபதி மற்றும் எங்கும்
நினைத்திடற் கரிய நோன்மைச்
சதாசிவ நிமலன் காக்க.

16

நிற்புழிப் புவன நாதன்
ஏகுழி நிமல மேனிப்
பொற்பிர மணுதி நாதன்
இருப்புழிப் பொருவி லாத
அற்புத வேத வேத்தியன்
அருந்துயில் கொள்ளும் ஆங்கண்
தற்பர சிவன் வழிக்குச்
சாமள ருத்ரன் காக்க.

17

மலைமுதல் துருக்கம் தம்மில்
புராரிகாத் திடுக மன்னும்
சிலைவலி வேட ரூபன்
செறிந்த கானகத்திற் காக்க
கொலையமர் கற்பத் தண்ட
கோடிகள் குலுங்க நக்குப்
பலபடி நடிக்கும் வீர
பத்திரன் முழுதுங் காக்க.

18

பல்லுளைப் புரவித் திண்டேர்
படுமதக் களிறு பாய்மா
வில்லுடைப் பதாதி தொக்கு
மிடைந்திடும் எண்ணில் கோடி
கொல்லியன் மாலை வைவேற்
குறுகலர் குறுகுங் காலை
வில்லியோர் பங்கன் செங்கை
மழுப்படை துணித்துக் காக்க!

19

தத்துநீர்ப் புணரி யாடைத்
தரணியைச் சுமந்து மானப்
பைத்தலை நெடிய பாந்தட்
பஃறலை யனைத்தும் தேய்ந்து
முத்தலை படைத்த தொக்கு
மூரிவெங் கனல்கொள் சூலம்
பொய்த்தொழிற் கள்வர் தம்மைப்
பொருதழித் தினிது காக்க.

20

முடங்குளை முதலா யுள்ள
முழுவலிக் கொடிய மாக்கள்
அடங்கலும் பிளுகம் கொல்க
என்றிவை யனைத்து முள்ளம்
திடம்பட நினைந்து பாவம்
செயுஞ்சிவ கவசம் தன்னை
உடன்படத் தரிப்பை யாஞல்
உலம்பொரு குவவுத் தோளாய்!

11

(வேறு)

பஞ்சபா தகங்கள்போம் பகைகள் மாய்ந்திடும்
அஞ்சலில் மறலியும் அஞ்சி ஆட்செயும்
வஞ்சநோய் ஒழிந்திடும் வறுமை தீர்ந்திடும்
தஞ்சமென் றிதனை நீ தரித்தல் வேண்டுமால்.

* பிரமோத்தர காண்டத்துச் சிவகவசம் உரைத்த அத்தி யாயத்து வரும் செய்யுட்கள் இவை.

செய். 20: பாவம்—பாவனை; மானசப் பூசை.

சௌபாக்கியத்துக்கு

சக்தி வழிபாடு

[illegible]

[illegible]

# 1. சக்தியே சித்தி தருவாள்

"சுவாமி, நவகோடி திரவியங்களையும் நான் என்ன செய்யட்டும்?" என்று கேட்கிறார் கணக்காளர்.

"தெருவில் வீசி விடு" எறிந்து என்கிறார் உரியவர்.

கணக்காளரும் அப்படியே எடுத்து தெருவில் வீசி எறிந்துவிடுகின்றார். உரியவரோ, திரும்பியும் பார்க்காமல், கோவண தாரியாகப் போய் விடுகின்றார்.

முற்றத் துறந்து, துறவுக்கே இலக்கணபுருஷராக இப்படி விளங்கியவர் பட்டினத்தடிகள்.

இவர் பஞ்சத்தால் பரதேசிக் கோலம் பூண்டவர் அல்லர்.

எளிமையால் ஏதுமற்றுப்போய் வெளியேறியவரும் அல்லர்.

பெருவணிகர்; கோடிகோடியான சொத்துச் சுகங்களைப் படைத்தவர்.

ஞான ஒளிச்சுடர் பட்டதும் ஞான மயமேயாகிச் சிவஞானியாகி விடுகிறார்!

சிவானந்தத் தேனை உண்டு களித்திருக்கும் மகாயோக நிலையிலே, அவருக்கு மனிதர்களின் ஆசைகளும் பாசங்களும் தோன்றவில்லை.

பற்றுக்களை முற்றவும் அறுத்துவிட்டு, இறைப்பற்றை மட்டுமே கொண்டு, 'பட்டினத்துப் பிள்ளையைப்போல் யாரும் துறக்கல் அரிது' என்று பிற துறவிகளாலும் போற்றப்பெறும் பரமஞானியாக விளங்கினார் இவர்.

* * *

ஒரு சமயம் அடிகள் அறுவடை முடிந்த வயற்புறங் களிலே சுற்றியபடி யிருக்கின்றார். சோர்வு அவரை ஓய்வுக்குத் துரத்துகின்றது. வயல்வரப்பிலே தலைவைத்த படி கண்மூடுகிறார்.

சிறு பெண்கள் சிலர் அந்தப் பக்கமாகப் போகிறார் கள். பட்டினத்தடிகளைப் பார்த்ததும் வணங்கிப் பக்தி யோடு நிற்கின்றனர்.

"கோடிகோடிச் செல்வங்களையும் சுகங்களையும் விட்டு விட்டு இப்படிக் கட்டாந்தரையிலே படுத்திருக்கின்றாரே; இவர் அல்லரோ துறவி" என்று, தன் தோழியிடம் கூறு கின்றாள் ஒருத்தி.

அந்தத் தோழியோ மகா குறும்புக்காரி; வாயாடியுங் கூட. "என்ன துறந்தும் என்னடி? இன்னும் தலைக்கு உயரம் தானேடி விரும்புகின்றார்" என்கிறாள்.

"உன் குறும்பு உன்னைவிட்டுப் போகாதடி; பெரியோர் களை இப்படி அவமதிக்காதே" என்கிறாள் அவள்.

"உண்மையைத் தானேடி சொன்னேன்" என்கிறாள் இவள்.

அவர்கள் இப்படிப் பேசிக்கொண்டே போய்விட்டார் கள்.

பட்டினத்தடிகளும் அந்தப் பேச்சைக் கேட்டார். அவர், அந்தப் பெண் சொன்னது சரியென்றே நினைத்தார். வரப்பைவிட்டு விலகிச் சென்று தாளடி வயல் தரையில் படுத்துக்கொண்டார்.

இப்படி முற்றவும் துறந்து, பற்றே பற்றாத பரம ஞானியாக விளங்கியவர் பட்டினத்தடிகள்.

ஆனால், அவருக்கும் சொல்லிலடங்காத பாசம் தம் அன்னைமீது இருந்தது. தாயார் இறந்தபோது அவர் கதறிக் கதறிப் பாடிய பாடல்கள், இன்றைக்கும் என்றைக்கும் தாய்மைப் பாசத்தின் மணிமுடிகளாகும்.

ஏன் இப்படி?

பத்து மாதம் கருப்பையிலே தாங்கி, அணுப்பிரமாண மான கருவுக்கு உடலின் எல்லா உறுப்புகளும் வளர்ந்து செழிக்கத் தன் உடலின் சக்திகளையே தந்து, ஆண் மகவாகப் பெற்றுப் பேணி வளர்த்து மகிழ்ந்த அந்தத் தாய்மையை, அவரால் மறக்கவே முடியவில்லை.

அன்னையின் உடலிலேயிருந்து பெற்ற உடல்தானே தமக்கு எல்லா ஞானத்தையும் இருந்து பெறுவதற்கு உதவுகின்றது என்று நினைத்தபோது, அந்த மகானும் கலங்கிக் கண்ணீர்க் கடலுள் வீழ்ந்து துடிக்கின்றார்.

முன்னை இட்டதீ முப்புறத்திலே
பின்னை இட்டதீ தென்னிலங்கையில்
அன்னை இட்டதீ அடிவயிற்றிலே
யானும் இட்டதீ மூள்க மூள்கவே!

என்று, அன்னையின் உடலுக்குத் தீமூட்டிய போது மனம் வெந்து புலம்புகின்றார் பட்டினத்தார்.

* * *

'தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை' என்பது சத்திய பூர்வமான தமிழ் வாக்கு.

'அனைத்தும் பிரம மயம்' என்ற ஏகான்மவாதத்தை நாடெங்கும் பரப்பிய ஆதி சங்கரரும், தம் தாய்க்கடனை ஒருபோதும் மறந்துவிடவில்லை.

தம்மைப் பெற்று உலகிலே உடலோடு உலவவிட்ட அந்த நன்றிக் கடனை, அவர் இறந்தபோது கண்ணீருடன் காணிக்கையாக்கியே கழிக்கின்றார்.

* * *

ஆகவே, இறையை, பரம்பொருளைத் தாயின் வடிவாகவே கொண்டு போற்றுவது என்பது சிறந்ததாகின்றது.

மகா முனிவர்களுக்கும் மகா ஜனங்களுக்கும் அதுவே சிறந்ததாக விளங்கிற்று.

சர்வ தயாபரியாகிய அன்னையாகவே பரம்பொருளை மனங்கொண்டு வழிபடும்போது கிடைக்கின்ற பயன்களும் மனநிறைவும் அளவிறந்தவை.

அழுகிற குழந்தையின் பசியை நினைந்து அன்போடு அமுதளித்து, அதன் முகத்திலே படரும் ஆனந்தத்திலே தான் பரமானந்தத்தை அடைபவள் தாய்.

அவளைப் போலவே தன்னை வேண்டுவார் துயர் களைந்து, அவர்கள் அதனாலே கொள்ளும் ஆனந்தத்தைக் கண்டு, தான் மகிழ்ச்சியிலே திளைக்கும் தாய்மையுணர்வோடு விளங்குபவள் பராபரையாள்.

அழவும் தோன்றாமல் பசியாலே வாடிக் கிடக்கும் மகவையும், அதன் பசி நினைந்து, தானே வந்தெடுத்து அமுதூட்டி அதற்கு ஆனந்தம் தருகின்றவளும் தாய்தான்.

பால் நினைந்து ஊட்டும் தாயின் இந்தக் கசிவு தாய்மை யுணர்வின் தனிக் கனிவாகும்.

இவ்வாறே கேளாதார்க்கும் அவர் வேண்டுவென காலமறிந்து உதவி இன்புறுத்திக் களிக்கும் கருணையே வடிவானவளும் பராபரையாளே.

ஆகவே,

தெய்வ வழிபாட்டிலே தாய்வழிபாடுதான் மக்கள் அனைவராலும் விரும்பி மேற்கொள்ளப் பெறுகின்றது.

அந்த வழிபாட்டிலே, அவளின் மகா கருணையின் நிழலில் நாம் நிம்மதியோடு, பரமானந்த வாழ்வைக் காணலாம் என்பது பெரியோர்களின் வாக்குறுதியும் அநுபவமும் ஆகும்.

'சக்தி வழிபாடு' என்னும் இந்தத் தாய்த்தெய்வ வழிபாடுகள் பல வகைகளில், பல ரூபங்களில், நம் நாடெங்கும் இன்று படர்ந்து நிலவுகின்றது.

இவற்றுள் மிகச் சிறந்ததும், எந்த நிலையினரும் எளிதாகவே செய்து பயன்பெறத் தக்கதும், ஆதிசங்கர பகவத் பாதர் அவர்கள் அருளிய மானசபூசை மரபாகும்.

மனப்பரிபக்குவம் மட்டும் இருந்துவிட்டால், அனைவருமே இந்தப் பூசனையை மேற்கொள்ளலாம்.

பூசைக்கான கவலைகளோ செலவுகளோ அதிகம் இல்லை. பூசிக்கும் உள்ளத்தின் பரிபக்குவம், தெளிவு மட்டுமே வேண்டும்.

சங்கரரின் மானச பூசையின் வழி நிழலில் நின்று அமைத்தவை இந்தச் செய்யுட்களும், உரைநடைகளும். இவை மனத்தில் நிலைத்து, மகாசக்தியை மனத்தில் கொண்டு நிறுத்தும் ஆற்றல் பெற்றவை.

ஏன் என்றால், அவள் அருளால் பிறந்தவையே இவை!

அமைதியான இடத்தில், தூய்மையாக அமர்ந்து, எண்ணங்களைப் புறம்போகாமல் தடுத்து, மனோபாவனையிலே மகா சக்தியின் கருணைவடிவை நிறுத்தி, நாள் தோறும் காலையில் பூசித்து வாருங்கள்.

தேவியின் கருணை கிடைப்பது நிச்சயம்!

பாடல்களை மனமுருகப் பாடுங்கள்; பாடும்போதே அந்தந்தப் பூசனையைச் செய்யும் பாவனைகளையும் நினைவிலே நினைத்துக் கொள்ளுங்கள்.

வசதியும் வாய்ப்பும் பெருகும்.

பெருகும்போது, வேண்டிய பொருள்களையும் அமைத்துப் பூசிக்கத் தொடங்கலாம்.

அதற்கும் இவ் வழிபாட்டு மரபு பயன்படும்.

* * *

சர்வ வல்லமையும் தானேயாக விளங்கும் மகா சக்தியின் நினைவு உள்ளத்திலே நிலைத்துவிட்டால், உங்களிடம் அந்த வல்லமைகள் படர்ந்து ஒளிவீசத் தொடங்குவதை நீங்களே காண்பீர்கள்.

சக்திமயமான மனத்தின் சக்தியை நீங்களே உணர்ந்து பூரிப்பீர்கள்.

சக்திகள் பெருகச் சித்திகள் தாமே தேடி வரும்.

சித்தத் தெளிவும், சிவஞான வளமும், சிவானந்த போகமும் கைகூடும்.

அன்னையைத் தொழுது, அவள் கருணையால் அத்தனையும் நினைந்து, அனைவரும் ஆத்மானந்த சீலர்களாகிப் பிறவியறுத்துப் பெருநிலை பெறுவோமாக!

* * *

அன்னை பாரபரையின் அருள், அனைவருக்கும் அவளைப் பாவனையிலே கண்டு பூசித்து ஆனந்தம் காணும் பாக்கியத்தையும் தந்து உதவுமாக!

அனைத்தும்தான் தோற்றி அருள்செய்யும் அவளை
எனைத்துயிர் தமக்கும் இன்பருள் முதலை
நினைத்துளம் கொள்ள நிகரிலா இன்பம்
அனைத்தும்நம் வசமாம் அவளருள் வாளே!

## 2. தேவி மானச பூசை

1. அரியாசனத்தே காண்பேன்

அலைகள் எழுந்து எழுந்து முழக்கமிட்டபடியே இருக்கின்ற அமுதமயமான ஒரு பெருங்கடல், அக்கடலின் நடுவான உள்ளிடத்தே விளங்குகின்றதொரு அழகிய மணித்தீவு. அத்தீவினிடத்தே, தழைகளாலே செறிந்த கடம்பின் மரச்சோலை ஒன்று, அச்சோலையின் நடுவே இரத்தினங்களால் இழைத்துச் செய்யப்பெற்ற வனப்பான ஓர் ஆயிரக்கால் மண்டபம். அம் மண்டபத்திலே கலையெழில் மிக்கு விளங்கும் ஒரு சிறந்த விமானம்; அதிலே, சிந்தாமணியின் ஒளியானது வீசிக் கொண்டிருக்கும் ஒரு இரத்தினச் சிம்மாசனம்; அந்தச் சிம்மாசனத்திலே, நீயும் எழில்மயமாக வீற்றிருப்பதைக் காண்கின்றேன், தாயே!

அலையெழும் கடலின் உள்ளோர்
அணிமணித் தீவொன் றஃதில்
இலைசெறி கடம்பின் சோலை
இருக்குமோர் இரத்தின கூடம்
கலைதிகழ் விமானம் அங்கே
கவினொளி சிதறும் மேலே
நிலவரி யாச னம்மேல்
நின்னெழில் தோற்றம் காண்பேன். (1)

## 2. ஒளிமுகம் காண்பேன்

கதிரவனும், சந்திரனும், நெருப்பும் மண்டலங்களாக அமைந்து ஒளிசெய்கின்ற ஸ்ரீ சக்கரத்தின் நடுவிடமாக, செல்வம்போற் சிறந்த பிந்துஸ்தானமாகிய நடுவிடத்திலே, இளஞ் சூரியனைப்போல அமர்ந்து ஒளிசெய்கின்ற நின்னைக் காண்கின்றேன். நின் கைகளிலே அங்குசம், வில், அம்பு ஆகியவைகளையும் நீ கொண்டிருக்கின்றாய். நின் திருமுகத்திலே புத்தொளி படர்ந்து ஒளி வீசுகின்றது. இத்தகைய நின்னை என் மனத்திலே ஏற்றுக் கொள்ளுகின்றேன், தாயே!

கதிரொடு மதியும் தீயும்
கனியும் ஸ்ரீ சக்ரம் தன்னில்
நிதியெனும் பிந்து மத்தி
நின்றிளங் கதிரின் செம்மை
கதுவும்நின் மேனி காண்பேன்
கையிலங் குசமும் வில்லும்
புதுவொளி முகமும் உள்ளம்
போற்றியே காண்பேன் அம்மா! (2)

## 3. அன்புருக் காண்பேன்

நின் சிற்றிடையிலே செம்பட்டு அணிந்திருக்கின்றனை! அதன்மேல் ஒட்டியாணம் ஒளி செய்கின்றது! மான்போலும் அழகிய கண்ணுடையாளே! நல்ல சந்திர கலைகள் வீசுகின்ற சிறந்த கிரீடம் ஒன்றும் நின் சிரசிலே ஒளிவீசுகின்றது. நின் சிவப்பான செவ்விய இதழ்களிலே இளமுறுவலும் காணப்படுகின்றது. தீமைகளை அழிக்கும் நின்னுடைய அன்பான அத்தகைய உருவத்தை, நான் முனக்கண்ணால் காண்கின்றேன், தாயே!

செவ்விய பட்டுச் சேர்ந்த
சிற்றிடை ஒட்டி யாணம்
நவ்வியம் கண்ணுய் நல்ல
நன்மதிக் கலைகள் வீசும்
திவ்விய முடியும் சூட்டிச்
செவ்விதழ் முறுவல் கோட்டி
அவ்வியம் அழிக்கும் நின்றன்
அன்புருக் காண்பேன் அம்மா! (3)

## 4. கொலுவிருக்கை சேவிப்பேன்

மேகங்கள் உலாவருகின்ற, கடலின் நீல வண்ணமான அழகானது மிகுதியாக அமைந்து விளங்கும் திருமேனி வண்ணமுடைய நின்னை, நன்ருகவே நான் பார்க்கின்றேன். புகழ்பரவிய ஈசானனும், பிற உருத்திரர்களும் கால்களாகவும், உணர்ந்தறியப்படும் ஒப்பற்ற சதாசிவம் ஒளிதிகழும் மேற்பலகையாகவும் அமைந்த, இரத்தினமயமான அந்த ஆசனத்திலே, நீ கொலுவீற்றிருப்பதையும் நான் காண்கின்றேன் தாயே!

காருலாம் கடலின் நீலக்
கவின்மிகும் உடலாய் அங்கே
பேருலாம் ஈசா னத்தான்
பிறபல ருத்ரர் காலாய்
ஒருமோர் சதாசி வந்தான்
ஒளிதிகழ் பலகை யாகக்
கூறுமோர் ரத்தின பீடக்
கொலுவினில் நின்னைக் காண்பேன்! (4)

## 5. அர்க்கியம் அளிப்பேன்

குங்குமப்பூ, கர்ப்பூரம், சந்தனம் முதலியவைகள் கலந்து அரைக்கப்பட்ட சாந்தக் கலவை நிரம்பியதும், அதன்மேலும் அட்சதைகளோடு ரத்தினமும் கலந்தது மான அர்க்கியமும், சுத்தமான நீரினுலே நின் பொற் பாதங்களில் இட்டுப் போற்றி, எவ்விடத்தையும் நின் பேரன்பினுலே அருளிக் காக்கும் இறைவியான நின் திருமுகத்திலே எழுகின்ற அந்த மகிழ்ச்சியையும் நான் காண்கின்றேன், தாயே!

குங்குமம் பூரம் சாந்தம்
கூட்டியே குழைத்த தேய்வைத்
தங்குமட் சதைகள் ரத்னம்
தகைமிகு நீரிற் சேர்த்துப்
பொங்குமன் பாலே நின்றன்
பொற்பதம் சொரிந்து போற்றி
எங்குமன் பாலே காக்கும்
இறைவியுன் மகிழ்வு காண்பேன்! (5)

## 6. அபிடேகம் செய்வேன்

யோகியர்களின் உள்ளத்திலே எப்போதும் நிலைத்து நிற்கும், ஒப்புமையே இல்லாதவளான மகாதேவியே! இவ்வுலகினிடத்திலே உள்ளவரான போகவாழ்வினரின் வாழ்வையும் காத்தருளும் புவனேஸ்வரியே! மந்திர ஜபம் செய்யப்பெற்ற புத்தம் புதிய பன்னீரும், சந்தனம், குங்குமப்பூ, கர்ப்பூரம் முதயவையும் கலந்த நறுநீராலே, உனக்கு மனத்தால் இப்போதில் அபிஷேகம் செய் கின்றேன், தாயே!

யோகியர் உளத்தில் நிற்கும்
ஒப்பிலாய் உலகம் தன்னுள்
போகியர் வாழ்வும் காக்கும்
புவனையே மந்திரம் சொன்ன
நாகிள நீரும் சாந்தும்
நல்லகுங் குமப்பூ பூரம்
ஆகிய கலந்த நீரால்
அபிடேகம் செய்வேன் அம்மா! (6)

7. ஆடையும் அணியும் தருவேன்

'ஹ்ரீங்கார சொரூபி' என்னும்படியாகக் காட்சி தருகின்ற, மகா கருணையுள்ளவளான, ஓங்கார நாத வடிவினளே! நினக்கு ஒப்பனை செய்யும் பொருட்டாக, வளமுடைய மகாமேரு மலையினிடத்தே கிடைக்கின்ற பலவகையான மணிகளையும் கொணர்ந்து கோத்து அமைத்ததும், தீய குற்றம் ஏதும் இல்லாததுமான அழகிய பட்டுச்சேலையும், பட்டாலான மேற்சேலையும், நீளமான முத்துப் பூணூலும் அழகொளிரப் பூட்டிக் கண்டு நான் ஆனந்திப்பேன், தாயே!

ரீங்காரி என்னத் தோன்றும்
ஓங்காரி நினக்கே மிக்க
பாங்கான மேரு தன்னின்
பன்மணி தேடிக் கோத்த
தீங்கான தில்லாச் செய்ய
தீம்பட்டும் மேற்சே லையும்
வாங்கான முத்தின் பூணூல்
வனப்புடன் அணிந்தே காண்பேன்! (7)

8. இதயத்தாற் பணிவேன்

நடையழகினுலே அன்னப்பறவையையும் தோல்வி அடையச் செய்துவிடும் செவ்விதான மெல்லிய அழகார்ந்த நடையினையுடைய தேவியே! ஆராய்ந்து சிறப்புடைய தாகக்கொண்ட சொர்ணமும், முத்தும், நீலவொளி சுடரிடுகின்ற மணியும், பிற மணிவகைகளும் சேர்த்த, நன் முறையிலே செய்யப்பெற்ற வளைகளை நின் தோள்களுக் கும், கைகளுக்கும் அணிவேன். இனிதாக ஒலிக்கும் பொற் சிலம்புகளைநின் பாதங்களிற் பூட்டி, நின் எழிலைக் கண்டு கண்டு ஆனந்தத்தால் போற்றிப் பணிவேன், தாயே!

அன்னமும் நடையில் தோற்கும்
அணிநடைப் பொன்னே ஆய்ந்த
சொன்னமும் முத்தும் நீலச்
சுடர்மணி வகையும் சேர்த்த
நன்னரின் வளைநின் தோட்கும்
கைக்குமே அணிவேன் பாதம்
இன்னியச் சிலம்பும் சேர்ப்பேன்
இதயத்தால் எழிலைக் காண்பேன்! (8)

9. நகைகள் பூட்டுவேன்

பிறை வடிவாகச் செய்யப்பெற்ற சூடாமணியினை நின் திருமுடியிலே அழகுறச் சூட்டுவேன். குற்றமில்லாத முத்தினைப் பதித்த நல்ல மூக்குத்திகளை நின் மூக்கிற்கு அணிவேன். நின் விரல்களுக்கு ஏற்ற மோதிரங்களைப் பூட்டுவேன். இன்னும், நின் மனம் நிறைவாகும்படியாகப் பற்பல நகைகளையும் என் ஆசைதீரப் பூட்டி, ஒப்பற்ற காப்பினையும் நின் கையில் இடுவேன். குறைவில்லாத எழிலைக் கொட்டியபடியே விளங்கும் கோதையான நின் திருவுருவினைப் பார்த்துப் பார்த்து மகிழ்வேன், தாயே!

பிறையதன் வடிவிற் சூடா
  மணிதிரு முடியிற் சேர்ப்பேன்
குறைதவிர் முத்தின் நல்ல
  மூக்குத்தி மோதி ரங்கள்
நிறையணி பணிகள் பூட்டி
  நிகரிலாக் காப்பும் இட்டே
குறைவிலா எழிலைக் கொட்டும்
  கோதைநின் வடிவம் காண்பேன்! (9)

## 10. மையிட்டு மகிழ்வேன்

நின் திருமேனியிலே பூசுவதற்கென்றே, உயர்ந்த செஞ்சனத்தின் அரையலுடன், கருப்பூரமும், தொட்ட இடமெல்லாம் மணக்கும் நறுமணப் பொருள்களும், இனிதான குங்குமப்பூவும் சேர்த்துக் கலந்த நறுஞ்சாந்தினை நினக்கு அளிப்பேன். நின் நெற்றிக்கு மணம் கமழும் கத்தூரிப் பொட்டினை இட்டுக் காண்பேன். அகற்சி மிகுந்ததான நின் நீண்ட திருவிழிகளுக்கு மையும் தந்து, இவற்றால் நீ பெற்றுவிளங்கும் பேரெழிலைக் கண்டு, என் உள்ளம் களிப்படைவேன், தாயே.

உடலினிற் பூசற் கேற்ற
  உயர்சாந்தம் பூரத் தோடே
இடமெலாம் மணமே சேர்க்கும்
  இனியகுங் குமப்பூக் கூட்டி
மடமுளாய் அணிவேன் நெற்றி
  மணக்குகஸ் தூரிப் பொட்டும்
தடங்கணாய் விழிக்கு மையும்
  தந்துளம் களிப்பேன் தாயே! (10)

## 11. மாலை சூட்டிக் காண்பேன்

பளிங்கினைப்போல ஒளிசெய்யும் நின் கன்னங்களிலே, கோரோசனையால் பத்திரம் இட்டுத் திருஷ்டி வராமற் செய்வேன். இளைய கமுகு என்னத் தோன்றும் நின் கழுத்திலே, இனிய மணம் மிகுந்ததான புனுகு கலந்த சாந்தத்தைப் பூசுவேன். மலர்களிலே சிறப்புடைய செங் கழுநீர், மல்லிகை, மகிழம் ஆகியவற்றோடே, தவனமும் பிற பலவும் தொடுத்த மாலையைப் பணிவுடன் நினக்குச் சூட்டி, நின் கம்பீர எழிலைக் கண்டு மகிழ்வேன், தாயே!

பளிங்கொளிர் கன்னம் தன்னில்
பகர்கோரோ சனையின் பத்ரம்
இளங்கமு கென்னும் கண்டத்
தெழில்மிகு நாவிச் சாந்தம்
மலர்களிற் கழுநீர் மல்லி
மகிழொடு தவனம் மற்றும்
பலப்பல தொடுத்த மாலை
பணிவுடன் சூட்டிக் காண்பேன்! (11)

## 12. தூபம் இடுவேன்!

காமதேவனை எரித்துச் சாம்பராக்கிய ஈசுவரனின் உள்ளத்தினை நின்பாற் கவர்வதற்கென்றே, நின்னுடைய சியாமள வண்ணமான திருமேனி முழுவதும், முதுகிலே தவழ்ந்தாடும் நின் கருங்கூந்தலும் இனிய நறுமணம் பெறுவதற்காக, தூயதான நறுமணத் தூப மிடுவேன். இன்னும் நீ மனம் உவக்கும்படியான பிற எல்லா வற்றையுமே, என் நெஞ்சினாலே நினையும் மனோபாவனை யாலே, நினக்குத் தருவேன், தாயே!

காமனை எரித்த ஈசன்
கருத்தினை நின்பாற் கொள்ளச்
சாமள மேனி மற்றும்
தவழ்கருங் கூந்தல் முற்றும்
தூமணம் பெறுதற் கென்றே
துய்யநல் தூபம் சேர்ப்பேன்
நீமனம் உவக்கும் எல்லாம்
நெஞ்சினுற் செய்வேன் தாயே! (12)

13. திருவமுது படைப்பேன்

மகேஸ்வரியே! ரீங்கார ரூபிணியே! என் இதயத்தே யாக எப்போதும் நிலையாக விளங்குபவளே! நினக்குத் திருவமுதாகப் பாற்சோறும், நெய்ச்சோறும், புதிதான இளங்காய்களினுலே சுவைபடச் செய்த கறிவகைகளும், ஒளியுடைய பொன்வட்டிலிலே, நின் மனம் திருப்தியடை யும்படியாக நினக்குப் படைப்பேன். மேலும், தேனும் பாலும் மகிழ்வோடு கலந்து, நினக்குப் பருகவும் அளிப்பேன், தாயே!

ஈஸ்வரி ரீங்கார ரூபி
இதயத்தாய் இம்மயே நல்ல
போசனம் பால்நெய்ச் சோறும்
புத்திளம் கறிகாய்த் தொக்கும்
தேசுள பொன்னின் வட்டில்
திருமுனே அமுதா வைப்பேன்
மாசிலாத் தேனும் பாலும்
மகிழ்வுடன் அளிப்பேன் தாயே! (13)

**14. தாம்பூலம் தருவேன்**

இளசான வெற்றிலையாகத் தேர்ந்தெடுத்து, வேண்டிய அளவிற்கு முத்துச் சுண்ணும்பும், நன்ருக விளைந்த பாக்கின் சீவலும், நறுமணப் பொருள்களும் சேர்த்து, முத்தன்ன பற்கள் ஒளிருகின்ற சிறுநகைப்புரியும் நின் வாயானது முழுச்சிவப்பினைப் பெறுவதற்கும், நீ வாய்திறக்கும் போதெல்லாம் நாள் முழுமையும் நறுமணம் கமழ்வதற்கும், நினக்குத் தாம்பூலம் அளிப்பேன், தாயே!

வெற்றிலை இளசாய்த் தேர்ந்தே
 வேண்டிய முத்துச் சுண்ணம்
நற்றிறப் பாக்கின் சீவல்
 நறுமணப் பொருள்கள் சேர்த்தே
முத்திளம் முறுவல் வாய்க்கே
 முழுச்சிவப் பொடுநல் வாண்ட
இத்தினம் கமழ்தற் கென்றே
 இடுவன்நான் எழிலார் தாயே! (14)

**15. ஆரத்தி எடுப்பேன்**

அழகியரான இளம்பருவத்துக் கன்னிப் பெண்கள், அழகான பொன் தட்டங்களை ஏந்திக் கொண்டே, தங்களின் தளிரனைய திருவடிகளை அசைத்த வண்ணம் நினக்குரிய காணிக்கைப் பொருள்களைக் கொண்டு தருவார்கள். பொன் தட்டத்திலே தீபம் ஏந்தியவராகக் குற்றமற்ற வாத்தியங்கள் ஒலிமுழங்கப், பரதநாட்டிய பாணியிலே வந்து, நினக்கு அழகுற ஆரத்தியும் அவர்களை எடுக்கச் செய்வேன். இவற்ருல் மகிழ்ந்திருக்கும் நின்னை என் இதயத்தாலே நினைந்து போற்றித் தொழுவேன், தாயே!

அழகிளம் கன்னிப் பெண்கள்
அம்பொனின் தட்டம் ஏந்தித்
தளிரடி அசைத்தே பொன்னின்
தட்டத்தில் தீபம் சுற்றிப்
பழுதிலா இயங்கள் ஓங்கப்
பரதத்தால் நினக்கா ராத்தி
எழிலுடன் எடுக்கச் செய்வேன்
இதயத்தாற் களிப்பேன் கண்டே! (15)

**16. இசையும் நடனமும்**

செல்வத்தின் அதிதேவதையான திருமகள் முத்துக் கோத்த திருக்குடையினைத் தாங்கியவளாக, நினக்கு நிழலிட்டுப் பிடித்தபடியே நிற்பாள். ஒப்பற்ற மாதான இந்திராணியானவள், இரதி தேவியோடும் சேர்ந்து, நினக்கு இருபுறமும் நின்றபடியாக் கவரிகளை அசைத் தசைத்து விசிறிக்கொண்டிருப்பாள். கலைகளுக்கெல்லாம் அதிதேவதையான கலைமகள், வீணையினை மீட்டியபடி இனிய இசையினை எழுப்பி நின்னை மகிழ்விப்பாள். கண்கவரும் அழகியரான தேவலோகத்து நடன மாதர்கள், நீ உவக்கும்படியாக, நின் முன்னிலையிலே திருநடனம் செய்தபடி இருப்பார்கள். இவற்றை எல்லாம் என் மனக் கண்ணாலே கண்டு கண்டு, யானும் மகிழ்ச்சியுடைவேன், தாயே!

திருமகள் முத்துக் கோத்த
திருக்குடை பிடிக்கத் தேவர்
ஒருமகள் இந்தி ராணி
இரதியொடும் கவரி வீசக்

கலைமகள் வீணை மீட்டக்
கண்கவர் தேவ மாதர்
திருநடம் புரிவர் சிந்தை
திகட்டவே காண்பேன் யானே! (16)

17. தொழுது களிப்பேன்

சான்றோர்கள் போற்றும் வேதங்களின் அரிய திருமுடியாகப் போற்றப்படும் சிறப்புடையது உபநிடதமாகும். அவற்றின் முடிவான பொருளாக உரைக்கப் படுகின்ற மகாவாக்கியத்தினாலே குறித்துச் சொல்லப் படுகின்ற திருவடிவத்தை உடையவளே! ரீம், ஸ்ரீம், ஹ்ரீம் என்னும் மூன்று ரீங்கார மந்திரங்களின் உள்ளேயும் மகா மந்திர வடிவமாக முகிழ்த்துவந்து அருள்புரின்ற தேவியே! என் இதயத்தேயும் கனிவோடு தோன்றி வந்து, எனக்கும் அருள்வாயாக என்று வேண்டி, நின்னைத் தொழுது, அப்படித் தொழுவதிலேயே ஒரு களிப் பினையும் நான் காண்பேன், தாயே!

ஆன்றவர் வேதம் நான்கின்
அருந்தலை உபநி ஷத்தின்
ஏன்றுசொல் மாவாக் யத்தில்
இயம்பிடும் வடிவத் தாளே
மூன்றுரீங் காரத் துள்ளும்
முகிழ்த்தெழுந் தருளும் தேவி
தேன்றிகழ் குழலாய் நின்றாள்
தேடியே தொழுவேன் யானே! (17)

## 18. மனம் இரங்கி ஏற்பாய்!

மகேஸ்வரியே! யாவர் நின் பேரெழிலை முழுவதும் போற்றி, இங்கே எடுத்துச்சொல்லும் ஆற்றல் பெற்றவர்கள்? நின் குழந்தையான நான் மனம் விரும்பிச் செய்யும் இந்த மனோபாவனையேயான இந்த எளிய பூசையினையை, மனமிரங்கி ஏற்றுக் கொள்வாய் தாயே! நான் நின்னை இரந்து வேண்டுகின்ற வரங்களை எல்லாம் தந்தருளி, எந்தவொரு குறைபாடுமே இல்லாத சுகவாழ்வினையும் எனக்குத் தந்தருளி, மாறுபாடே இல்லாத மனோசாந்த நிலையிலே, எ ன க் கு நிரந்தரமான மகிழ்ச்சியையும் ஈந்தருள்வாய், தாயே!

யாருனை முழுதும் கண்டார்
எவருனை முற்றும் சொல்வார்
பாரிதின் அனையே நின்றன்
பக்தியாம் பூசை கொண்டே
கோரிடும் வரங்க ளோடே
குறையிலா வாழ்வும் நல்கி
மாறிலா மனோசாந் தத்தின்
மகிழ்ச்சியில் எமைவைப் பாயே! (18)

## 19. நின் கருணையே கருணை!

அதிகாலையிலே உறக்கம் விட்டு எழுந்து, காலைக் கடன்களை முடித்துக் கொண்டு அமர்ந்து, 'கருணையுள்ளவளே!' என்று உன்னை நினைந்து போற்றுவேன். மாலையிலும் அவ்வாறே நின் திருவடியினை மனத்தகத்தே கொண்டவனாய், 'மகா சக்தியான அன்னையே!' என்று போற்றுவேன். இவ்வாறு இருவேளைகளிலும் நின்னை உளம்

கொண்டு போற்ற, ஆலையிலே சிக்கிய கரும்பைப்போல நசுங்கி நசுங்கி உருவழிந்துகொண்டிருந்த என் உள்ள மானது, அமைதியிலே துள்ளலிடுகின்ற அதிசயத்தையும் காண்பேன். பாற்கடலிடத்தே தோன்றிய அமுதத்தினும் மேலாக எனக்கு வாழ்வளிக்கும் விமலையே! நின் பெருங் கருணைத் திறம்தான் என்னே, தாயே!

மலைமகள் அருளும் பொங்க
மாண்புள கலைகள் வாய்க்க
அலைமகள் செல்வம் எல்லாம்
அகமகிழ்ந் தளிக்க என்றும்
உலைவிலா உளத்தோ டிந்த
உலகிலே வாழ்தற் குன்தாள்
நினைவிலே கொண்டேன் தாயே!
நீகனிந் தருள்வாய் இன்றே! (19)

## 20. சகல நலமும் தருவாய்!

மலைமகளான பார்வதிதேவியின் திருவருள் பொங்கிப் பெருகி வந்து என்னிடத்தே சேரவும், மாண்புகள் உடையவான கலைகள் எல்லாம் கலைமகளின் அருளினுலே எனக்கு வந்து வாய்த்திடவும், அலைமகளான திருமகளின் கடாட்சத்தினுலே செல்வம் எனப்படும் எல்லாச் சிறப்புக் களையும் அவள் அகமகிழ்ச்சியோடே எனக்கு அளித்து உதவவும், என்றைக்கும் சஞ்சலம் இல்லாத மனத்தோடே இந்த உலகத்திலே நான் வாழ்வதற்கு, உன்னையே துணையென்று பற்றிக் கொண்டு விட்டேன், அன்னையே! நீதான் அருள் கனிந்தனையாய், எனக்கு எல்லாச் சக்தி களையும் அளித்து, என்னையும் காத்தருள்வாய், தாயே!

காலையிற் கடன்கள் செய்தே
கருணையாள் நின்னைப் போற்றி
மாலையும் மனத்திற் கொண்டே
மாசக்தி தாராய் என்பேன்
ஆலையிற் கரும்பாம் உள்ளம்
அமைதியில் துள்ளக் காண்பேன்
வேலையின் அமுதின் மேலாம்
விமலையென் கருணைத் தாயே! (20)

**ஓம் மகா சக்தி திருவடிகளே சரணம்!**

# 4. சக்தி போற்றிகள்---108

அன்பெனும் வடிவே போற்றி
அருளெனும் மழையே போற்றி
அகரமாய் ஒலிப்பாய் போற்றி
அனைத்துமாய் எழுந்தாய் போற்றி
அங்கயற் கண்ணாய் போற்றி
அகிலமா தாயே போற்றி
ஆதியே அருளே போற்றி
ஆதார வித்தே போற்றி
இமயவான் கொம்பே போற்றி
இறைவியே போற்றி! போற்றி! (10)

ஈசனின் இடத்தாய் போற்றி
ஈங்காரி இமயே போற்றி
ஈடிலா முதலே போற்றி
ஈமத்தான் துணையே போற்றி
உலகெலாம் காப்பாய் போற்றி
உகரமாய் ஒலிப்பாய் போற்றி
உள்ளொளி நிறைவே போற்றி
உவப்பவர் மனத்தாய் போற்றி
ஊங்கார ஒலியே போற்றி
ஒருத்தியே போற்றி போற்றி! (20)

எதனுளும் இருப்பாய் போற்றி
எங்கணும் மலர்வாய் போற்றி
எண்திசை காப்பாய் போற்றி
எல்லையிற் காளீ போற்றி
ஏதங்கள் தவிர்ப்பாய் போற்றி
ஏற்றமே மிகுப்பாய் போற்றி
ஏலவார் குழலீ போற்றி
ஏடெலாம் மணப்பாய் போற்றி
ஐம்பூதப் பொருளே போற்றி!
ஐயையே போற்றி! போற்றி!
ஐம்புலன் அவிப்பாய் போற்றி
ஐயங்கள் அழிப்பாய் போற்றி
ஒளிவளர் விளக்கே போற்றி
ஒப்பிலா மணியே போற்றி
ஓதுவார் உயிர்ப்பே போற்றி
ஓங்காரப் பொருளே போற்றி
ஓடுசெம் புனலே போற்றி
ஓய்விலா உமையே போற்றி
கன்னியே கனிவே போற்றி
காந்திமா மதியே போற்றி!
காரணப் பொருளே போற்றி
கார்முகில் நிறத்தாய் போற்றி
காமாட்சித் தாயே போற்றி
காக்குங்கைச் சூலி போற்றி
கிருபையே வடிவாய் போற்றி
கிருஷ்ணையாம் மாதே போற்றி
கீதமார் இசையே போற்றி
கீர்த்திகள் தருவாய் போற்றி
குமரிமா தெய்வம் போற்றி
கோமதித் தாயே போற்றி!

கெண்டைவேல் விழியாய் போற்றி
கெச்சைசூழ் பதத்தாய் போற்றி
கேட்பவர்க்கு அருள்வாய் போற்றி
கேடெல்லாம் களைவாய் போற்றி
கொடியிடை யாளே போற்றி
கொற்றவைத் தாயே போற்றி
கொஞ்சிடும் சொல்லாய் போற்றி
கொழுந்தமிழ் வடிவே போற்றி
கோலங்கொள் கொடியே போற்றி
கோதை மீனாட்சி போற்றி! (60)

சங்கரன் உளத்தாய் போற்றி
சகலமா சக்தீ போற்றி
சிவனுளம் சேர்ந்தாய் போற்றி
சிவகாம நிலையே போற்றி
சித்திகள் தருவாய் போற்றி
சிந்துரப் பொட்டாய் போற்றி
சித்தங்கள் தெளிப்பாய் போற்றி
சிந்தொலிச் சிலம்பாய் போற்றி
சீவர்கள் புகலே போற்றி
சிவசிவை போற்றி! போற்றி! (70)

சுந்தரச் சுடரே போற்றி
சுத்தநல் மாயே போற்றி
சூலங்கொள் கரத்தீ போற்றி
சூதுளம் சுடுவாய் போற்றி
செம்பொருள் நிலையே போற்றி
செந்திலான் தாயே போற்றி
செருமுனைக் காளீ போற்றி
செந்தமிழ் நலமே போற்றி
சேலெனும் கண்ணீ போற்றி
சேவடி போற்றி! போற்றி! (80)

சொல்லிழை நாதம் போற்றி
சோலைவாழ் பசுமை போற்றி
ஞானமா மலையே போற்றி
ஞாலத்தின் நிலையே போற்றி
தத்துவங் கடந்தாய் போற்றி
தடாதகைப் பிராட்டி போற்றி
தாண்டவன் மனத்தாய் போற்றி
தாளத்தின் அமைவே போற்றி
தாமரைப் பதத்தீ போற்றி
தாண்டவீ போற்றி போற்றி! (90)

துர்க்கையே துணையே போற்றி
துடியிடை மானே போற்றி
தொடக்கமே முடிவே போற்றி
தொழுபவர் மனத்தாய் போற்றி
நாதத்தின் ஒலியே போற்றி
நாட்டத்தில் நடிப்பாய் போற்றி
பகவதித் தாயே போற்றி
பவானிபா ரதியே போற்றி
புந்தியில் நிற்பாய் போற்றி
புவனையே போற்றி போற்றி! (100)

பூதங்கள் புணர்ப்பாய் போற்றி
பூமணத் தொளிர்வாய் போற்றி
மங்கல வடிவே போற்றி
மாயையே மாதா போற்றி
மோனத்தின் முதலே போற்றி
மோகன நகையே போற்றி
விரிகலை வடிவே போற்றி
விமலையே போற்றி போற்றி! (108)

## 5. சக்தி கவசம்

1

அங்கையில் கரகம் தாங்கும்
பிரமாணி அருளி னேடும்
துங்கமென் சென்னி காக்க
வயிணவி துகளி லாகம்
எங்கணுங் காக்க செய்ய
ஏந்தெழில் உருத்தி ராணி
தங்கும்எண் திசையும் அன்பு
தழைத்திட இனிது காக்க.

2

கொன்னுனைச் சூலி சென்னி
மயிரினைக் குறித்துக் காக்க
மன்னுவெண் பிறைதாழ் சென்னி
வயங்கொளி நெற்றி காக்க
பன்மயிர்ப் புருவம் நாளும்
பரிவொடும் உமையாள் காக்க
என்னையாள் முக்கண் ஈசன்
இறைவிகண் ணிணைகள் காக்க.

3

வயமிகும் இமய வல்லி
    மூக்கினை மகிழ்ந்து காக்க
செயையொடு விசயை மேல்கீழ்
    இதழினைச் சிறந்து காக்க
அயிலுடைச் சுருதி தூய
    அஞ்செவி காக்க தண்ணென்
பயில்மலர் உறையும் செல்வி
    பல்லினை உவந்து காக்க.

4

சண்டிமென் கபோலம் காக்க
    தவளநாண் மலரின் வைகும்
ஒண்டொடி நல்நாக் காக்க
    விசயைமங் கலைமற் றெவ்வாக்
கண்கவர் நாடி காக்கக்
    காத்தியா யனியெஞ் ஞான்றும்
முண்டக மலரின் தூய
    முகத்தினைச் சிறந்து காக்க.

5

காளமுண் டிருண்ட நீல
    கண்டிமென் கழுத்துக் காக்க
கோளில்பூ தார சக்தி
    சுவல்புறம் காக்க கூர்மி
நீளொளிச் சந்தி காக்க
    அயிந்திரி நெறியி னேடும்
தோளிணை காக்க பத்மை
    துணைமலர் அங்கை காக்க.

6

கமலைகை விரல்கள் காக்க
விரசைகை யுகிர்கள் காக்க
திமிரமுண் டொளிரும் வெய்யோன்
மண்டலத் துறையும் செல்வி
எமதிரு வாகு மூலம்
காக்க வானவர்கள் ஏத்த
அமிர்தல கரிநாள் நாளும்
அகன்மணி மார்பம் காக்க.

7

தரித்திரி இதயம் காக்க
தயித்தியர்ச் செகுப்போள் மிக்க
கருத்தொடும் முலைகள் காக்க
சகத்தினில் இறைமை பூண்டோள்
திருத்தகு வயிறு காக்க
திகழ்தபோ கதிதன் உள்ளத்
தருத்தியின் உந்தி காக்க
அசை வளர் முதுகு காக்க.

8

கருதரு விகடை காக்க
கடிதடம் பார்மை வாய்ந்த
குருமணிச் சகனம் காக்க
குகாரணி குய்யம் காக்க
அருள்தர வரும் அபாய
கந்தினி அபானம் காக்க
தெருளுடை விபுதை என்றும்
சிறப்புடைக் குறங்கு காக்க.

9

வனிதைமென் முழந்தாள் காக்க
இயற்சபை கணைக்கால் காக்க
கனிதரு கோரை வாய்ந்த
பரட்டினைக் காக்க மிக்க
அளிகொள்பா தலத்தில் செல்வோள்
அணிகெழு புறந்தாள் காக்க
ஒளிர்நகம் விரல்கள் சந்திரி
உக்கிரி உவந்து காக்க.

10

தலந்துறை மடந்தை உள்ளங்
காலிணை காக்க தண்ணென்
மலர்த்திரு மனையைக் காக்க
வயங்குகேத் திரதை ஓங்கி
உவப்பில் கேத்திரங்கள் காக்க
பிரியகரை ஒழிவ றுது
நலத்தகு மக்கள் தம்மை
நன்குறக் காக்க அன்றே.

11

உயர்சனு தனிஎஞ் ஞான்றும்
ஒழிவரும் ஆயுள் காக்க
மயர்வறு கீர்த்தி யாவும்
மாதேவி காக்க மிக்க
செயிரறு தருமம் யாவும்
தனுத்திரி சிறந்து காக்க
இயல்புடைக் குலத்தை வாய்ந்த
குலதேவி இனிது காக்க.

12

சற்கதி பிரதை நல்லோர்
இயைபினைத் தாவிற் கர்க்க
விற்கொடும் போரில் நீரில்
வெளியினில் வனத்தில் சூதில்
இற்புறம் அதனில் ஓங்கும்
சர்வாணி காக்க என்றுப்
பொற்றரும் மலர்கள் தூவிப்
புங்கவர் ஏற்றி னரே!

குறிப்பு : இதற்கு வச்சிரபஞ்சகம் என்றும் பெயர். இதனை ஓதிவர எல்லாத் தொல்லைகளும் நீங்கும். நீரிலே ஓதித் தரக் குழந்தைகளின் சகல பிணிகளும், நோயாளி களின் தொந்தரவுகளும் விலகும்.

பகையிலும் வழக்குகளிலும் வெற்றியும் கிடைக்கும்.

## 5. பராசக்தி கவசம்

பங்கயத் திருவே பராபர ஒளியே
இங்கிதப் பொருளே ஏந்திழை யாளே
சங்கையில் ஞான தத்துவ முதலே
பொங்கர வணிந்த புரிசடை யாளே
எங்கணும் நிறைந்த எண்தோளீ நீலி

கங்காளி கௌரி கரதனு கபாலி
மங்கமா தங்கி வராகி ஆனந்தி
சங்கரி துர்க்கை சதுமறை முதலி
மூர்க்க தாருகனை முடிதுணித் தவளே!
மார்க்கமாந் தொண்டர் மனம்நிற் பவளே

ஏற்கும் இவ்வுலகில் ஏக மானவளே
தீர்க்கமாய் அண்டர் திசைபடைத் தவளே
காக்க இவ்வுலகம் கண்விழித் தவளே
பாற்கடல் புவிவான் பரவிநின் றவளே
சூர்ப்பகை தொலைத்த சுந்தரி அகோரி

மார்க்கமில் மகிட மர்த்தனி உமையே
ஏகாட் சரத்தின் இயல்பறிந் தவளே
சாகா மருந்தைத் தந்துகாப் பவளே
நீறணி சடைச்சி நித்யா னந்தி
வீரி வேதாளி விசயை அந் தரியே

கலையா னனத்தி கலையூர்தி கன்னி
மலைமகள் சமரி மாற்கு இளையவளே
விமலை விந்தை வீரச் செல்வி
சமரச வேத சக்கரா யுதத்தி
வேலை விடத்தை விழுங்குவோன் முதல்வி

பாலைக் கிழத்தி பரவுமுக் குணத்தி
வாலை வராகி வாள்கைக்கொண் டாளே!
ஞாலம் படைத்த நங்கையம் பிகையே
அன்னைநின் நாமம் அளவறிந் தெடுத்தே
உன்னியிங்கு உரைக்க உறுமதி இல்லேன்

உன்னெழிற் பாதம் உபயமும் காக்க
கணைக்கால் முழந்தாள் கங்காளி காக்க
பணைத்துடை இரண்டும் பகவதி காக்க
இடுப்பொடு குய்யம் எண்தோளி காக்க
தொடுத்திடு நாபி சூலியாள் காக்க

நெஞ்சுமார்பு இருதோள் நின்மலை காக்க
நஞ்சுள கண்டம் நாயகி காக்க
பேசிடும் நா பல் பிஞுகியாள் காக்க
நாசிகள் இரண்டும் நாரணி காக்க
இருசெவி எழிலார் ஈஸ்வரி காக்க

பருவிழி இரண்டும் பகவதி காக்க
நெற்றியும் சிரசும் சத்தியாள் காக்க
பற்றிய முதுகினைப் பார்வதி காக்க
பக்கம் இரண்டும் பரையே காக்க
சக்கரா யுதத்தி சிரந்தனைக் காக்க

திருநீறு எடுத்துத் தேகத்தில் தூர்வி
வருபகை யரணியின் வாயைக் கிழித்துப்
பில்லி கற்றவரைப் பிடித்தே இறுக்கிப்

பல்லைப் பிடுங்கிப் பதைத்திட அடிப்பாய்
ஓரெழுத் தாகியே உலகினைப் படைத்து

ஈரெழுத் தாகியே எங்கணும் நிறைந்து
மூவெழுத் தான முச்சுடர் ஒளியே!
நான்கெழுத்து அதனில் நடந்திடும் பதத்தி!
பஞ்சாட்ச ரத்தில் பதிந்தமெய்ப் பொருளே!
சடாட்ச ரத்தில் சரமாய் நின்று

அட்சரம் தோறும் அரும்பொரு ளாகி
முக்கோ ணத்தின் முதன்மையா னவளே!
நாற்கோ ணத்தின் நடுநிலைப் பொருளே!
ஐங்கோ ணத்தில் அரூபியா னவளே!
அறுகோ ணத்தில் உருபல ஆனோய்

எண்கோ ணத்தில் இலகுமெய்ப் பொருளே
எண்ணைந்து மூன்றின் இகபர ஒளியே
விண்ணைந்து பூத வெளியே உமையே
தத்துவ முடிவே சருவமா னவளே
கற்றுணர்ந் தோர்க்குக் கைவிளக் கொளியே

பக்தியற் றோரைப் பாரா தவளே
புத்தியற் றோரைப் பிளந்தகோ டரியே
சத்துமுத் தான சங்கரி கௌரி
முத்தியின் முதலே முச்சுடர் ஒளியே
சத்தியொன் றாகிச் சலனங்கள் வேறும்

நித்தியா னந்த நின்மல சொரூபி
ஐயை எண்தோளி அலகையின் கொடியோய்
பகவதி துர்க்கை பாசாங்கு சத்தி
இகபர சுகத்தி இருள்ஒழிப் பவளே
குண்டலி குமரி குருச்சேத் திரத்தி

சண்டிகை சூலி தாருக விநாசனி
மாயவல் அணங்கு மதுபதி சூரி
நேயரைக் காக்கும் நித்ய கல்யாணி
நாரணி எளியேன் நாவிருப் பவளே
காரணி கிருபா ஹரிபக வதியே

வஞ்சகம் பேசும் நெஞ்சைப் பிளந்து
அஞ்சிப்பின் னோட அலகை நின்றாட
நாய் நரி புலம்ப நாட்டுவாய் சூலம்
பேய்பில்லி யாவும் பின்னிடத் துரத்தி
மைந்தனைக் காக்க மாதரா வருக

பந்தியாய் உனது படைகளும் வருக
வக்கிர துண்டன் குகன் வயிரவன் வருக
சக்ரா யுதனுடன் சதுர்முகன் வருக
ஐயன் பிடாரி அனைவரும் வருக
வையக தேவதை வருக இங்ஙனமே

அறிந்த தேவதைகள் அறியா தவைகள்
தெரிந்த தேவதைகள் தெரியா தவைகள்
யாவரும் வருக ஆட்சியாய் இங்கு
தேவரும் வருக தேவி நின் கொலுவில்
அடித்திடும் மணி சிலம்பு அசைகுறை யாமல்

படித்திடும் பாட்டிற் பதங்குறை யாமல்
செந்தமிழ் மாரி சிந்தியே துதிக்கப்
பைந்தமிழ் வாணர் பார்த்ததி சயிக்க
மைந்தன் வாக்கினில் மாறா திருக்க
அஷ்டதிக் குள்ள அரும்பெரும் புலவர்

இஷ்டர்கள் ஆகி எனக்கு உறவாகி
துஷ்டர் நிர்மூடர் தொலைந்து போக

கஷ்டம் விலக்கிக் கருணைசெய் திடுவாய்
சுந்தரி அகோரி தோகாய் சரணம்
அந்தரி கவுரி அம்பிகே சரணம்! 105

அருள்தர அடியேற்கு ஆதியே சரணம்
சரணம் சரணம் சங்கரீ சரணம்!
சரணம் சரணம் சாம்பவீ சரணம்!

இது மிகவும் பயன்தரும் சக்திகவசம். நித்திய பாராயணம் சத்தியின் நிலையான கார்ப்பினைத் தரும்.

### பச்சை மாணிக்கம்

இருகுழை கோமளம், தாள்புட்ப
ராகம், இரண்டு கண்ணும்
குரு மணி நீலம், கை கோமேதகம்,
நகம் கூர்வயிரம்,
திருநகை முத்து, கனிவாய்
பவளம் சிறந்த வல்லி,
மரகத நாமம், திருமேனி
யும் பச்சை மாணிக்கமே!

## 6. தேவியைப் பரவுதல்

ஆனைத்தோல் போர்த்துப்
புலியின் உரியுடுத்துக்
கானத்து எருமைக்
கருந்தலைமேல் நின்றாயால்—
வானோர் வணங்க
மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய்
நடுக்கின்றியே நிற்பாய்!

வரிவளைக்கை வாளேந்தி
மாமயிடற் செற்று
கரிய திரிகோட்டுக்
கலைமிசைமேல் நின்றாயால்—
அரிஅரன் பூமேலோன்
அகமலர்மேல் மன்னும்
விரிகதிர்அம் சோதி
விளக்காகியே நிற்பாய்!

—இளங்கோவடிகள்